உலகளாவிய தமிழர்

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தகுடி எனத் தமிழினத்தின் தொன்மையைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும். உலகில் முதன்முதலில் தோன்றிய மனிதன் தமிழனே என்பது மானிடவியல் ஆராய்ச்சியாளர்களின் கருத்து. குமரிக்கண்டத்தில் தோன்றிய தமிழினம் உலகமெலாம் பரவித் தன்புகழை நிலைநாட்டி வருகிறது.

தமிழினப் பரவல்

உலகில் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை பெற்ற நூற்றுத் தொண்ணூற்று இரண்டு நாடுகளும் நாற்பத்து மூன்று ஆட்சிப்புலங்களும் ஆக இருநூற்று முப்பத்தைந்து நாடுகள் உள்ளன. அவற்றில் ஏறத்தாழ நூற்றைம்பத்து நான்கு நாடுகளில் தமிழினம் பரவியுள்ளது. பத்துத் தமிழர்கள் முதல் ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் தமிழர்கள் வரை அந்நாடுகளில் வாழ்கிறார்கள். அவற்றுள், இருபது நாடுகளில் இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர் வாழ்கின்றனர்.

தமிழர் புலம் பெயரக் காரணங்கள்

வாணிகம், வேலைவாய்ப்பு ஆகிய காரணங்களுக்காகத் தமிழர்கள் அயல் நாடுகளுக்குச் சென்றார்கள். சங்க இலக்கியங்களிலும் இது குறித்த செய்தி காணப்படுகிறது. அதனாலன்றோ ஔவையாரும், திரைகடலோடியும் திரவியம் தேடு என்றார். சாதுவன் வாணிகம் செய்யும்பொருட்டுக் கடல்கடந்து சென்ற குறிப்பு மணிமேகலையில் உள்ளது. ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுக்காரர்களும் தமிழர் சிலரை அடிமைக் கூலிகளாக்கி, அவர்தம் ஆளுகைக்கு உட்பட்ட நாடுகளுக்கு அழைத்துச் சென்றனர். சிலர், நாட்டில் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாகவும் மற்றும் சிலர், அன்னியப் படையெடுப்பின் காரணமாகவும் தமிழகத்தைவிட்டுப் பிழைக்கச் சென்றனர்.

தமிழர் நிலை

தமிழர் புலம்பெயர்ந்து சென்று பல நாடுகளில் வாழ்ந்தாலும், தமது உடலுழைப்பாலும் நேர்மையாலும் அந்நாடுகளை வளம்பெறச் செய்தனர்; தாமும் வளம்பெற்று உயர்ந்துள்ளனர்; தம் உரிமைகளையும் நிலை நாட்டியுள்ளனர்.

பண்பாட்டு நிலை

சிங்கப்பூர், மலேசியா, பினாங்குத் தீவு ஆகிய நாடுகளில் கோவில்கள் கட்டி ஆண்டுதோறும் திருவிழாக்களைச் சிறப்பாக நடத்தி வருகின்றனர். பரப்பளவில் சிறியதான ரியூனியன் தீவில் வாழ்பவர்களுள் பெரும்பான்மை மக்கள் தமிழரே. அவர்கள் பிரெஞ்சுக்காரர்களால் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலிருந்து ஒப்பந்தக் கூலிகளாக அங்குக் குடியமர்த்தப்பட்டார்கள். பிரான்சு நாட்டின் ஒரு பகுதியாகக் கருதப்படும் அத்தீவில்

வாழும் தமிழர்கள் பிரெஞ்சுமொழியே பேசுகிறார்கள். அவர்கள், தமிழைப் பேசாதபோதும் தமிழர்தம் பண்பாட்டுக் கூறுகளை மறவாது இன்றளவும் பின்பற்றி வருகிறார்கள். கோவில் திருவிழாக்களில் காவடி எடுப்பதும், தேரிழுப்பதும் அங்கு இன்றும் நடைபெற்று வருகின்றன. அந்நாடுகளில் தமிழ்மொழியைக் கற்கவும் கற்பிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

மொழிநிலை

இலங்கையில் வாழும் தமிழருள் தொண்ணூற்றைந்து விழுக்காட்டினர் தொடக்கப் பள்ளிமுதல் பல்கலைக்கழகம்வரை தமிழிலேயே கல்வி பயில்கின்றனர். சிங்கப்பூர், மொரிசியசு, மலேசியா, பிஜித்தீவுகள், தென் அமெரிக்கா, கனடா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படுகிறது. அமெரிக்க நாட்டுப் பேராசிரியர்கள் வி. எஸ். இராஜன், ஜார்ஜ் எல். ஹார்ட், கௌசல்யா ஹார்ட், சிம். லிண்ட் ஹோம், இந்திரா, நார்மன், ஹால் சிப்மேன், டபிள்யூ. குளோத்தி, ஜேம்ஸ் பிராங்கா, மறைந்த பேராசிரியர் ஏ.கே. இராமானுஜம் முதலியோர் தமிழுக்கு ஆற்றிய அரும்பணிகள் போற்றத்தக்கன. பல நாடுகளுக்கும் வாழச் சென்ற தமிழர்கள், தம் வருவாயை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல், தமிழை வளர்க்கும் செயல்களில் ஈடுபட்டு வருவது அவர்தம் மொழிப்பற்றைக் காட்டுகிறது. இருபத்து நான்கு மணிநேரமும் ஊடகங்களில் (வானொலி, தொலைக்காட்சி, இணையத்தளம்) தமிழ் நிகழ்ச்சிகளைக் கேட்கவும் காணவும் ஆங்காங்கே வாழும் தமிழர்கள் அந்தந்த நாட்டு அரசுகளிடம் அனுமதி பெற்றுள்ளார்கள். இந்த ஊடகங்கள் தமிழர்களை இணைக்கும் பாலங்களாகத் திகழ்கின்றன. அவை மொழியை மறவாமல் காக்கவும் மேம்படச் செய்யவும் பேருதவி புரிகின்றன.

தமிழ் ஆட்சிமொழி

இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் ஆட்சிமொழியாகத் தமிழ் திகழ்கிறது. தமிழைப் பாடமொழியாகப் பயிலவும், தமிழியல் ஆய்வுகளை மேற்கொள்ளவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இங்கு இசை, நாட்டியம், நாடகம் முதலியனவற்றைக் கற்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அச்சு, ஒலி, ஒளி ஊடகங்களை உலகெங்கும் தமிழர் நடத்தி வருகின்றனர்.

தமிழர்கள் அடைந்த உயர்வு

தமிழர், தம் நாட்டைவிட்டுச் சென்றபோதும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்னும் உயர்நோக்கோடு வாழ்ந்து வருகின்றனர். அங்கும் தமது திறமையை நிலைநாட்டி, உயர்பதவிகள் பலவற்றில் பணியாற்றி வருகின்றனர். அவர்கள், தொழில் துறையிலும் கல்வித் துறையிலும் கணினித் துறையிலும் காலூன்றிச் சிறப்புடன் பணியாற்றி வருகின்றார்கள். அடிமைகளாகவும் கூலிகளாகவும் சென்றநிலை மாறி, இன்று கல்வித்திறனையும் அறிவாற்றலையும் ஆளுமைத் திறனையும் வெளிப்படுத்தும் வகையில் உயர்பதவிகளில் பணியாற்றும் நிலைக்குத் தமிழர் உயர்ந்துள்ளனர். தாம் உயர்ந்தது மட்டுமல்லாமல் தம் தாய்நாட்டுக்குப் பெருமையும் வளமும் சேர்த்து வருகின்றனர்.

ஆட்சி நிலை

தமிழர் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலிய நாடுகள் பலவற்றில் உள்ளாட்சித் தேர்தல்களில் வெற்றிபெற்று ஆட்சிப் பொறுப்புகளையும் வகித்து வருகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர் எனப் பல பதவிகளிலும் சிறப்புறத் தொண்டாற்றி

வருகின்றனர். இந்தியாவில் மட்டுமல்லாமல், சிங்கப்பூர், மொரிசியசு ஆகிய நாடுகளில் குடியரசுத் தலைவர்களாகவும் தமிழர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்பது தமிழினத்துக்குப் பெருமை சேர்க்கிறது.

தாயகத்துடன் உறவுநிலை

தமிழர்கள், பல்வேறு காரணங்களுக்காகப் புலம்பெயர்ந்து அயல்நாடுகளில் வாழ்ந்து வந்தாலும், தம் தாயகத்தை மறவாமல் இருக்கிறார்கள். தாயகத்திலுள்ள வளங்களைத் தாம் வாழும் இடங்களுக்குக் கொண்டு செல்கிறார்கள். உணவுப்பொருள்கள், உடைகள், திருவிழாக்களுக்கான பொருள்கள், இசைக்கருவிகள், தமிழ் நூல்கள், இதழ்கள், கோவில் சிலைகளெனப் பண்பாட்டுக்குத் தேவையானவற்றைத் தாயகத்திலிருந்து தருவித்துக் கொள்கிறார்கள். அதனுடன் பண்பாட்டு நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகளுக்குத் தாயகத்திலிருந்து கலைஞர்களை வருவித்து மகிழ்கிறார்கள். இவ்வாறு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் தாயகத்திற்கு வருகைதந்து தம் பண்பாட்டை மேம்படுத்திக் கொள்கிறார்கள்.

தமிழன் என்றோர் இனமுண்டு, தனியே அவற்கொரு குணமுண்டு என்பதற்கிணங்க, உலகெங்கும் வாழும் தமிழர்கள் தங்களது பண்பாட்டு அடையாளங்களை மறவாமலும் மாற்றிக் கொள்ளாமலும் வாழ்கின்றனர். மேலும் அவர்கள், தமிழுக்கும் தமிழினத்துக்கும் தமிழகத்துக்கும் பெருமை சேர்த்து வருகிறார்கள். கணியன் பூங்குன்றனாரின் வாக்கை மெய்ப்பிக்கும் வண்ணம் இன்றும் தமிழர் உலகெங்கும் வாழ்ந்து வருகின்றனர்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. ஐக்கிய நாடுகளின் உறுப்புரிமை பெற்ற நாடுகளின் எண்ணிக்கை__________ .
2. சாதுவன் கடல் வாணிகம் மேற்கொண்டான் என்னும் குறிப்பு __________ நூலில் காணப்படுகிறது.
3. ‘திரைகடலோடியும் திரவியம் தேடு’ எனக் கூறியவர் __________ .
4. தமிழர்கள் ஒப்பந்தக் கூலிகளாக __________ தீவில் குடியமர்த்தப்பட்டார்கள்.
5. திருவிழாக்களில்__________ எடுப்பதும்__________ இழுப்பதும் இன்றும் நடைபெறுகிறது.

ஆ) குறுவினாக்கள்

1. தமிழினம் உலகில் எங்கெல்லாம் பரவியுள்ளது ?
2. தமிழர் புலம்பெயரக் காரணங்கள் யாவை ?
3. புலம்பெயர்ந்த தமிழரின் பண்பாட்டு நிலையை விளக்குக.
4. ஊடகங்கள் மொழி வளர்ச்சிக்கு ஆற்றும் பணிகளை எழுதுக.
5. அயல்நாட்டு ஆட்சிநிலையில் தமிழர்தம் பங்கினை எழுதுக.

இ) சிறுவினாக்கள்

1. இன்றைய நிலையில் தமிழர் புலம்பெயருவதற்கான காரணங்கள் யாவை ?
2. புலம்பெயர்ந்த தமிழர் தாயகத்துடன் கொண்டுள்ள தொடர்பு எத்தகையது ?
3. ரியூனியன் தீவில் வாழும் தமிழர் பற்றி எழுதுக.

ஈ) நெடுவினா

உலகளாவிய தமிழர்தம் மொழி நிலை, பண்பாட்டு நிலையை விவரிக்க.



திரு.வி.கலியாணசுந்தரனாரின் தமிழ்ப்பணி

சீரிளமைத் திறம்வாய்ந்த செம்மொழியான தமிழ்மொழியைத் தமிழகத்து மேடைகளில் ஏற்றித் தமிழைத்தென்றலாகத் தவழச்செய்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் திரு.வி.கலியாண சுந்தரனார். அவர், தமது தங்குதடையற்ற மேடைப்பேச்சாலும் இயல்பான மொழிநடையாலும் தமிழைப் பட்டிதொட்டிகள் எல்லாம் பரப்பித் தமிழ்த்தென்றல் எனப் போற்றப்பட்ட பெருந்தகையர்.

பிறப்பும் கல்வியும்

சென்னைக்கு அருகேயுள்ள துள்ளம் என்னும் ஊரில் விருத்தாசலனார் – சின்னம்மை யாரின் மகனாக 26.08.1883ஆம் நாள் பிறந்தார். சென்னை இராயப்பேட்டையிலுள்ள வெஸ்லி பள்ளியில் படித்தார். உடல்நலக்குறைவினால் இடைநின்று நான்கு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் அதே பள்ளியில் சேர்ந்தார். எனினும், தவிர்க்கமுடியாத காரணத்தினால் இறுதித்தேர்வினை அவரால் எழுத இயலவில்லை. ஆயினும், கதிரைவேலர் என்பாரிடம் தமிழ் பயின்று தமிழ்ப் பேராசிரியராக உயர்ந்தார். இலக்கியங்களையும் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் கற்பதில் பேரார்வங்கொண்டார்.

தமிழ்ப்பற்று

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதனை முழு மூச்சாகக்கொண்டு, வடமொழிச் சொற்கள் கலவாமல் தூய தமிழிலேயே பேசவும் எழுதவும் வேண்டும் என வலியுறுத்தினார். அதனை நடைமுறையில் பின்பற்றி அவரும் வாழ்ந்து காட்டினார்.

பிறமொழியறிவு

நமது உடல்நலத்தைப் பேணவேண்டும் என்று குறிப்பிட்டால், பிறர் உடல்நலத்தைக் கேடு சூழவேண்டும் என்று பொருள் கொள்ளக்கூடாது. அதுபோலவே, தமிழை வளர்க்க

வேண்டும் என்றால், பிறமொழியை வெறுக்கவேண்டும் என்பது பொருளன்று என்பார். அதற்கேற்பத் தாமும் ஆங்கில மொழியில் ஆழ்ந்தகன்ற புலமை பெற்றிருந்தார். காந்தியடிகள் தமிழகம் வந்தபோதெல்லாம் அவரது மேடைப் பேச்சினை மொழிபெயர்த்தவர் இவரே.

இளைஞர்களுக்கு அறிவுரை

இளைஞர்களுக்குத் தமிழுணர்வூட்டும் நோக்கில், "இளைஞர்களே! உங்கள் தமிழ்த்தாய் நேற்றுப் பிறந்தவள் அல்லள்; இன்று பிறந்தவள் அல்லள்; அவள் மிகத் தொன்மையுடையவள்; கலைகளையுடையவள். அவளையா கொல்வது? தாய்க்கொலை புரிவதா தமிழர் வீரம்? வீரத்துக்குரிய தங்கள் இளமுகம் நோக்கிக் கேட்கின்றேன். நேற்றும் இன்றும் பிறந்த நாடுகளையும் கலைகளையும் ஓம்பவும் பெருக்கவும் அவ்வந்நாட்டார் முயன்று வருகின்றனர். நாமோ, பழம்பெருநாட்டை மறைக்கப் பார்க்கின்றோம். தமிழ் இறந்தபின் தமிழ்மண் மட்டுமிருந்தென்ன? மொழி இறந்துபடின் நாடும் இறந்துபடுமன்றோ? உலகிற்கே ஒருபோது நாகரிகத்தை வழங்கிய மாண்பு வாய்ந்த ஒரு பெரும் நாட்டையா மறப்பது? அதனையா மறைப்பது?

"இளைஞர்களே! தமிழுலகின் இழிந்தநிலையை ஓருங்கள்; ஓர்ந்து (எண்ணி) உங்கள் பொறுப்பை உணருங்கள்; தமிழ்த்தாயைப் புதுப்போர்வையில் ஒப்பனை செய்து அரியாசனத்தமர்த்த சூள்கொண்டெழுங்கள், எழுங்கள்; பழந்தமிழ் வீரத்துடன் எழுங்கள்" என்று அறைகூவல் விடுப்பார்.

பேச்சுப்பணி

எழுத்து மட்டுமல்லாமல், தமது பேச்சாலும் தமிழ்வளர்த்த பெருமகனார் இவர். திரு.வி.க நடை என்றே ஒரு தனிநடையை நடைமுறைப்படுத்தும் அளவிற்கு பேசுவதுபோலவே எழுதுவது; எழுதுவதுபோலவே பேசுவது என்னும் முயற்சியில் இவர் வெற்றி கண்டவர்.

திரு.வி.க., வெல்லுஞ்சொல் இன்மையறிந்து உணர்ச்சிச் சொற்களைக் கோத்துக் கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் விரும்பும் வண்ணம் பேசுவதில் வல்லவர். அறிஞர் அண்ணா உள்ளிட்ட அக்கால இளைஞர்களை உணர்ச்சிமிகு பேச்சினால் தம்பால் ஈர்த்து மேடைத்தமிழின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் திரு.வி.க.

எழுத்துப் பணி

உரைநடை எழுதுவது எனது தொழில் என்னும் அளவிற்கு உரைநடைக்கு அவர் மதிப்புக் கொடுத்தார். அவருக்கு வாய்த்த மொழிநடை மலை எனத் தமிழுலகில் ஓங்கி உயர்ந்துள்ளது என்பார் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார். இதனால், இக்காலத் தமிழ்மொழி நடையாளராக மதிப்பிட்டுக் காணுமளவிற்குச் சீரிய மொழிநடையில் அவரின் மனித வாழ்க்கையும் காந்தியடிகளும், பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணைநலம், இமயமலை அல்லது தியானம் முதலிய நூல்கள் அவரது கற்பனைத்திறனையும், சீர்திருத்த ஈடுபாட்டையும் உயர்ந்த நடையையும் வெளிக்காட்டுகின்றன.

உரைநடை நூல்கள்

முருகன் அல்லது அழகு, சைவத்திறவு, சைவத்தின் சமரசம், கடவுட் காட்சியும் தாயுமானவரும், இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம், தமிழ்நாடும் நம்மாழ்வாரும், நாயன்மார் வரலாறு, தமிழ்நூல்களில் பௌத்தம், காதலா? முடியா? சீர்திருத்தமா?, என் கடன் பணிசெய்து கிடப்பதே, இந்தியாவும் விடுதலையும், தமிழ்ச்சோலை, உள்ளொளி என்பன இவர் இயற்றிய இன்னபிற உரைநடை நூல்கள்.

செய்யுள் நூல்கள்

முருகன் அருள்வேட்டல், திருமால் அருள்வேட்டல், கிறித்துவின் அருள்வேட்டல், அருகன் அருகே, உரிமை வேட்டல், பொதுமை வேட்டல், பொருளும் அருளும் அல்லது மார்க்சியமும் காந்தியமும் ஆகியன இவரது செய்யுள் நூல்கள்.

இதழ்ப்பணி

தேசபக்தன், நவசக்தி எனும் இதழ்களின் வாயிலாகத் தொழிலாளர் முன்னேற்றம்பெறப் பாடுபட்டவர். அதற்காகத் தமது ஆசிரியர் பணியையும் துறந்தார். தமது வீறுகொண்ட தமிழ்முழக்கத்தால், சிதறிக்கிடந்த தொழிலாளர்களை ஒன்றிணைத்துத் தொழிலாளர் இயக்கம் கண்டார்.

தமிழ் வாழ்வினர்

திரு.வி.க., தம் சிந்தனை, சொல், செயல் நிலையால் சுத்த சன்மார்க்கியாக, சமயப் பொதுமையாளராக விளங்கி அருந்தொண்டாற்றினார். எழுபது வயதாகி உடல்தளர்ந்து படுக்கையில் இருந்தபோதும் வளர்ச்சியும் வாழ்வும் அல்லது படுக்கைப் பிதற்றல் என்னும் நூலை மு. வரதராசனாரின் உதவியுடன் வெளியிட்டார். அவர், வாழ்நாளின் இறுதிவரை தமிழைத் தன் மூச்சாகக் கொண்டு தமிழ்ப்பணி ஆற்றினார்.

மணமுடித்த ஆறே ஆண்டுகளில் அவர்தம் மனைவி கமலாம்பிகை அம்மையாரை இழந்தார். தனிமையில் வாழ்ந்துவந்த அவரிடம் நண்பர் ஒருவர், 'மனைவியை இழந்து தனிமையில் வாழ்வது கடினமாக இல்லையா?' எனக் கேட்டார். அதற்கு, நான் தனியாக வாழவில்லை; தமிழோடு வாழ்கிறேன் எனக் கூறினார். திரு.வி.க., 1953ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பதினேழாம் நாள் தமது எழுபத்தோராம் வயதில் தமிழ் மூச்சுக்கு விடைதந்தார். அவர் விட்டுச்சென்ற தமிழ்மூச்சை நாமும் சுவாசித்து வாழ்வோம்.

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. திரு.வி.க. இளைஞர்களுக்குக் கூறும் அறிவுரை யாது?
2. திரு.வி.க.வின் எழுத்துப்பணியை விளக்குக.

தாய்மொழி

"ஈன்ற ஒருத்தியையும் பிறந்த நாட்டையும் பேசும் மொழியையும் ஒருவன், 'தாய்', 'தாய்','தாய்' என்று போற்றுகிறான். ஒருவனுக்குத் தன்னைப்பெற்ற தாயின்பால் எத்தகைய அன்புண்டோ, அத்தகைய அன்பு, அவனது நாட்டினிடத்தும், மொழியினிடத்தும் அவனுக்கு இருத்தல்வேண்டும். பெற்ற தாயின் அன்புக்கும், பிறந்த நாட்டின் பற்றுக்கும் ஊற்றாயிருப்பது பேசும் மொழியாகும். பேசுந் தாய்மொழியின்மாட்டு அன்பில்லா ஒருவன் தாயையும் நாட்டையும் பழித்தவனாவான்.

– திரு. வி. கலியாணசுந்தரனார்

வழாநிலை, வழு, வழுவமைதி

அ) வழாநிலை

இலக்கண முறைப்படி குற்றமில்லாது பேசுவதும் எழுதுவதும் வழாநிலை எனப்படும்.

செல்வன் படித்தான்.

இத்தொடரில் செல்வன் என்னும் ஆண்பால் ஒருமைப்பெயர் படித்தான் என்னும் ஆண்பால் ஒருமை வினைமுற்றைக் கொண்டே முடிகிறது. எனவே, இது வழாநிலை எனப்படும்.

வழாநிலை அறுவகைப்படும்.

1. திணை வழாநிலை	:	செல்வி பாடினாள், மாடு வந்தது.
2. பால் வழாநிலை	:	கண்ணன் வந்தான், நாய் ஓடியது.
3. இட வழாநிலை	:	நான் வந்தேன், நீ வருவாய்.
4. கால வழாநிலை	:	நாளை வருவேன், நேற்றுப் படித்தேன்.
5. வினா வழாநிலை	:	தமிழ் இலக்கணம் எத்தனை வகைப்படும் ?
6. விடை வழாநிலை	:	தமிழ்நாட்டின் தலைநகரம் எது ? என்ற வினாவுக்குச் சென்னை என விடையளித்தல்.

ஆ) வழு

இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும். வழு திணைவழு, பால்வழு, இடவழு, காலவழு, வினா வழு, விடைவழு, மரபுவழு என ஏழு வகைப்படும்.

1. திணைவழு

என் மாமா வந்தது.

மாமா என்னும் உயர்திணைப் பெயர் வந்தது என்னும் அஃறிணை வினைகொண்டு முடிந்தது. அதனால், இது திணைவழு.

2. பால்வழு

கண்ணகி வந்தான்.

கண்ணகி என்னும் பெண்பாற் பெயர், வந்தான் என்னும் ஆண்பால் வினைகொண்டு முடிந்துள்ளது. அதனால், இது பால்வழு.

3. இடவழு

நாங்கள் வந்தார்கள்.

நாங்கள் என்பது தன்மையிடத்துப் பன்மைப் பெயர். அப்பெயர் வந்தார்கள் என்னும் படர்க்கையிடத்துப் பலர்பாலோடு முடிந்துள்ளது. எனவே, இத்தொடர் இடவழு.

4. கால வழு

கரிகாலன் நாளை வந்தான்.

இத்தொடரில் நாளை என்னும் எதிர்காலப் பெயரோடு வந்தான் என இறந்தகால வினை மயங்கி வந்துள்ளது. அதனால், இது காலவழு.

5. வினாவழு

முட்டையிட்டது சேவலா பெட்டையா?

சேவல் எனப் பொருத்தமில்லாத வினாவைக் கேட்டதால் வினாவழு.

6. விடைவழு

நாளை பள்ளி திறக்கப்படுமா? என்ற வினாவுக்கு, என் அத்தைக்கு உடல்நலமில்லை எனக் கூறுவது விடைவழு ஆகும்.

7. மரபு வழு

நாய் கத்தும். இத்தொடர் மரபு வழு. ஏனெனில், நாய் குரைக்கும் என்பதே முறையான ஒலிமரபு.

இ) வழுவமைதி

இலக்கண முறைப்படி குற்றமுடையது எனினும், இலக்கண ஆசிரியர்களால் குற்றமன்று என்று ஏற்றுக்கொள்ளப்படுவது வழுவமைதி ஆகும்.

உவகை (மகிழ்ச்சி), சிறப்பு, உயர்வு, உறுதி, சினம் காரணமாகத் திணைவழுவும் பால்வழுவும் காலவழுவும் வழுவமைதியாக ஏற்றுக்கொள்ளப்படும்.

சான்று :

1. சிற்றூர்களில் சிலர், தாங்கள் வளர்க்கும் விலங்குகளுக்குப் பெயரிட்டு அழைக்கும் பழக்கம் உண்டு. வருகின்ற பசுவைப் பார்த்து, 'என் இலட்சுமி வந்துவிட்டாள்' எனக் கூறுவதனைக் கேட்டிருப்பீர்கள். இவ்வாறு கூறுவது, திணைவழுவாயினும் மகிழ்ச்சியின் காரணமாகத் திணைவழுவமைதியாக ஏற்றுக்கொள்கிறோம்.

2. குடியரசுத் தலைவர் நாளை தமிழகம் வருகிறார் – இத்தொடர், குடியரசுத் தலைவர் நாளை வருவார் என அமைதல்வேண்டும். அவ்வாறு அமையவில்லையென்றாலும் நாம் பிழையாகக் கருதுவதில்லை. ஏனெனில், அவரது வருகையின் உறுதித்தன்மை நோக்கிக் காலவழுவமைதியாக ஏற்றுக் கொள்கிறோம்.

வழு	–	பிழை, தவறு, குற்றம்
வழாநிலை	–	பிழையின்மை, தவறின்மை
வழுவமைதி	–	பிழை – ஆனால் பிழையாகக் கொள்ளாமை.

பயிற்சி : பொருந்தாத சொல்லை வட்டமிடுக.

அ) கண்ணன், கயல்விழி, மாணவர்கள், காகம்.

ஆ) மாடு கத்தும், யானை பிளிறும், குயில் கொஞ்சும், மயில் அகவும்.

இ) கூவும், கனைக்கும், கரையும், அகவும், அலறும்.

ஈ) குழந்தை, குட்டி, மனிதன், பார்ப்பு.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. உரிய விடையைத் தேர்ந்தெழுதுக.

1. வழு ________ வகைப்படும்.

அ) இரண்டு ஆ) ஏழு இ) ஒன்பது

2. என் மாமா வந்தது என்பது ____________________.

அ) திணை வழு ஆ) பால் வழு இ) கால வழு

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. இலக்கண முறையில்லாவிடினும் இலக்கணமுடையதாக ஏற்றுக்கொள்வது________

2. பசுவைப் பார்த்து ‘என் இலட்சுமி வந்தாள்’ என்பது ________ வழுவமைதி ஆகும்.

3. பிழையைத் திருத்தி எழுதுக.

1. தம்பி நேற்று வந்தாள். ____________________.
2. எருது வண்டியை இழுத்தன. ____________________.
3. மாணவர் தேர்வு எழுதினான். ____________________.
4. அவன் மாணவன் அல்ல. ____________________.
5. உடைகள் கிழிந்து விட்டது. ____________________.
6. எங்களூரில் ஒரு புலவர் வாழ்ந்தனர். ____________________.

வகுப்பறைத்திறன்கள்

எழுதுதல் திறன்

அ) உவமை, உருவக மாற்றம்

உவமை என்பது, ஒரு பொருளை அல்லது நிகழ்வை மற்றொரு பொருளோடு அல்லது நிகழ்வோடு ஒப்புமைப்படுத்துவது. உவமை, உவமிக்கும் பொருளைவிட உயர்ந்தது. உவமைத் தொடரில் உவமை முன்னும், பொருள் பின்னுமாக வரும்.

(எ–டு) மதி போன்ற முகம் – மதி – உவமை; முகம் – (உவமேயம்) பொருள்

கவிஞர், தாம் கருதிய பொருளையும் ஒப்புமைப் பொருளையும் (உவமையையும்) வெவ்வேறு எனக் கூறாமல், இரண்டும் ஒன்றெனக் கூறுவது **உருவகம்**. உருவகத்தொடரில் பொருள் முன்னும், உவமை பின்னுமாக வரும்.

(எ–டு) முகமதி: முகம் – பொருள்; மதி – உவமை. இங்கு இரண்டும் ஒன்றெனக் கூறப்பெற்றது.

உவமை உருவக மாற்றம்

உவமை		உருவகம்	உவமை		உருவகம்
தாமரைமுகம்	–	முகத்தாமரை	பவளவாய்	–	வாய்ப்பவளம்
தேன்மொழி	–	மொழித்தேன்	முத்துப்பல்	–	பல்முத்து

பயிற்சி

1. உவமைகளை உருவகங்களாக மாற்றுக.

கனிஇதழ், மலரடி, காந்தள்விரல், கயல்விழி, மதிமுகம்.

____

2. உருவகங்களை உவமைகளாக மாற்றுக.

தமிழமுது, கண்மலர், முகத்தாமரை.

____

ஆ) அடிச்சொல்லிலிருந்து சொற்களை உருவாக்குதல்

வா		அடிச்சொல்	படி		அடிச்சொல்
வந்தான்	–	வினைமுற்று	படித்தான்	–	வினைமுற்று
வந்த	–	பெயரெச்சம்	படித்த	–	பெயரெச்சம்
வந்து	–	வினையெச்சம்	படித்து	–	வினையெச்சம்
வருதல்	–	தொழிற்பெயர்	படித்தல்	–	தொழிற்பெயர்

பயிற்சி

நட, பாடு, செய், பார், ஓடு, செல்.

அடிச்சொல்	வினைமுற்று	பெயரெச்சம்	வினையெச்சம்	தொழிற்பெயர்
நட	நடந்தான்	நடந்து	நடந்த	நடத்தல்
______	______	______	______	______
______	______	______	______	______
______	______	______	______	______
______	______	______	______	______
______	______	______	______	______

படைப்பாற்றல் திறன்

இ) பாடலைக் காட்சிப்படுத்தல் : திருக்குறள் பாடலுக்குக் காட்சி :

1. “கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது. ”

2. “சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.”

மொழித்திறன் பயிற்சி

பிழை நீக்கி எழுதுதல்

ஒருவர் பேசும்போதும் எழுதும்போதும் பிழையின்றிப் பேசவும் எழுதவும்வேண்டும். பேச்சில் அல்லது எழுத்தில் பிழையிருப்பின் பொருள் மயக்கம் ஏற்படும். எனவே, சொற்களிலும் தொடர்களிலும் பிழைவராமல் காத்தல் வேண்டும்.

திணை, பால், எண், இடம், காலம், மரபு ஆகியன பிழையாக வாராமல் தொடரை எழுதவேண்டும்.

எழுவாய் உயர்திணையாக இருந்தால் பயனிலையும் உயர்திணையாக இருத்தல் வேண்டும்.

(எ–டு) பொன்னன் தொடரோட்டத்தில் கலந்துகொண்டான்.

எழுவாய் அஃறிணையாக இருந்தால் பயனிலையும் அஃறிணையாக இருத்தல் வேண்டும்.

(எ–டு) பசு புல் மேய்ந்தது.

எழுவாய், ஐம்பால்களுள் எந்தப் பாலில் உள்ளதோ அதற்கேற்பப் பயனிலையைப் பெறல் வேண்டும்.

(எ–டு) அழகன் பாடினான்.
வள்ளி ஆடினாள்.
புலவர்கள் பாடல்களை இயற்றினார்கள்.
யானை பிளிறியது.
மான்கள் ஓடின.

எழுவாய் – கள் விகுதி பெற்றால் பயனிலையும் கள் விகுதி பெறல் வேண்டும். எழுவாய் – அர் விகுதிபெற்றால் பயனிலையும் – அர் விகுதி பெறல் வேண்டும்.

(எ–டு) மாணவர்கள் சிறப்பாகத் தேர்வு எழுதினார்கள்.
மூவர் தேவாரத்தைப் பாடினர்.

எழுவாய் ஒருமையாக இருந்தால் பயனிலையும் ஒருமையாக இருத்தல் வேண்டும்.

எழுவாய் பன்மையாக இருந்தால் பயனிலையும் பன்மையாக இருத்தல் வேண்டும்.

(எ–டு) என் புத்தகம் இதுவன்று.
என் புத்தகங்கள் இவையல்ல.

தொடரில் காலவழு ஏற்படாமல் காத்தல் வேண்டும்.

(எ–டு) தலைவர் நாளை மதுரையில் பேசுவார்.

நேற்று மழை பொழிந்தது.

பிழையான சொற்களைத் திருத்துதல் (வழூஉச் சொற்களைத் திருத்துதல்)

பேச்சுவழக்குச் சொற்களை அப்படியே எழுத்தில் கொண்டுவருவது தவறு. அவ்வாறு எழுதுவதனை வழூஉச் சொற்கள் எனக் கூறுவர். அவற்றுக்குரிய எழுத்துவழக்குச் சொற்களை எழுதுவதே முறை.

பயிற்சி

வழூஉச் சொற்களைத் திருத்துக

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
அடமழை	________	சுடுதண்ணி	________
அரிவாமணை	________	எண்ணை	________
அவரக்காய்	________	ஒட்டறை	________
தவக்களை	________	கவுறு	________
சிலவு	________	பச்சதண்ணி	________
தாவாரம்	________	நஞ்சை	________

பிறமொழிச் சொற்களை நீக்கி உரிய தமிழ்ச்சொற்களை எழுதுக.

தமிழ்மொழியில் எழுதும்போது தமிழ்ச்சொற்களையே பயன்படுத்துதல் வேண்டும். நடைமுறையில் உள்ள பிறமொழிச்சொற்களையும் அவற்றுக்கு இணையான தமிழ்ச்சொற்களையும் அறிந்தால் பிறமொழிக் கலப்பின்றி எழுதலாம்.

தமிழ்ச்சொல் அறிவோம்.

பிறமொழிச் சொற்கள்	தமிழ்ச்சொற்கள்	பிறமொழிச் சொற்கள்	தமிழ்ச்சொற்கள்
அங்கத்தினர்	________	கும்பாபிஷேகம்	________
அர்த்தம்	________	சாவி	________
அலங்காரம்	________	சரித்திரம்	________
ஆரம்பம்	________	சபதம்	________
விஞ்ஞானம்	________	சாதம்	________
தீபம்	________	பௌத்திரி	________

உரிய தமிழெண்ணைத் தேர்ந்தெழுதுக.

1. பன்னிரண்டு என்பதன் தமிழெண்

அ) கஉ ஆ) சஉ இ) உஉ

2. ஏழு என்பதன் தமிழெண்

அ) அ ஆ) ரு இ) எ

3. பதினொன்று என்பதன் தமிழெண்

அ) கக ஆ) க0 இ) கச

4. இருபத்தெட்டு என்பதன் தமிழெண்

அ) கஅ ஆ) உஅ இ) கஎ

5. இருபது என்பதன் தமிழெண்

அ) க0 ஆ) உ0 இ) ச0

கட்டுரைப் பயிற்சி : பேரிடர் மேலாண்மை (ஆழிப்பேரலை)

கடிதப் பயிற்சி : களவுபோன பொருளைக் கண்டுபிடித்துத் தரக்கோரி, காவல்துறை ஆய்வாளருக்கு முறையீட்டுக் கடிதம் எழுதுக.

பண்பு

சமுதாயப் பணிகளில் பங்கேற்றல்

நங்கை : அப்பா! நான் பள்ளியிலிருந்து வரும்வழியில் அரசுக் கல்லூரியில் குருதிக்கொடை முகாம் நடந்துகொண்டிருப்பதைப் பார்த்தேன். எதற்காகக் குருதிக்கொடை தரவேண்டும்? அக்குருதியை என்ன செய்வார்கள், அப்பா! அதனைப்பற்றி விரிவாகக் கூறுங்களேன்.

குமரன் : குருதிக்கொடை பலரது உயிரைக் காக்கும்.

நங்கை : கொடையாக அளித்த குருதியை என்ன செய்வார்கள், அப்பா?

குமரன் : குருதிவங்கிகளில் சேமித்துப் பாதுகாப்பாக வைப்பார்கள். விபத்தில் சிக்கிக் குருதி இழந்தோருக்கும், அறுவை சிகிச்சையின்போதும் பொருத்தமான குருதிப் பிரிவைப் பயன்படுத்திக் கொள்வர்.

நங்கை : நானும் குருதியைத் தரலாமா, அப்பா?

குமரன் : இல்லை நங்கை. பதினெட்டு வயதுக்கு மேற்பட்டவரும் ஐம்பது வயதுக்குட் பட்டவருமாகிய ஆண், பெண் இருபாலாரும் குருதி தரலாம். ஆனால், அவரது எடை நாற்பத்தைந்து கிலோவிற்கு மேல் இருத்தல் வேண்டும். மஞ்சள்காமாலை, குடற்காய்ச்சல், பால்வினை நோய் இவற்றால் தாக்கப்பட்டவரும், கருவுற்ற பெண்களும் குருதி தருதல் கூடாது. உடல்நலத்துடன் இருப்பவர் மட்டுமே குருதி தரலாம்.

நங்கை : குருதிக்கொடை தந்தால் அவரது குருதி குறைந்துவிடாதா?

குமரன் : ஒருவரது உடலில் இருந்து இருநூற்றறைம்பதுமுதல் முந்நூறு மில்லிலிட்டர் வரை மட்டுமே குருதியை எடுத்துக்கொள்வர்.

அக்குருதி இருபத்தொரு நாளுக்குள் உடலில் மீண்டும் சுரந்துவிடும். மூன்று மாதத்திற்கு ஒருமுறை குருதிக்கொடை தரலாம். அதனால், குருதி கொடுப்பவருக்கு எந்தத் தீங்கும் நேராது. புரிந்ததா நங்கை?

நங்கை : நன்றாகப் புரிந்தது அப்பா! நானும் பதினெட்டு அகவைக்குப் பிறகு குருதியைக் கொடுத்துப் பலரின் உயிரைக் காப்பேன்.

1. குருதிக்கொடையினால் ஏற்படும் நன்மைகள் யாவை?
2. யாரெல்லாம் குருதி தரலாம்?
3. யாரெல்லாம் குருதி தரக்கூடாது?
4. எவ்வளவு குருதியைக் கொடையாகத் தரலாம்?
5. குருதிக்கொடையைப் போன்று வேறு என்னென்ன கொடைகள் உண்டு?

வாழ்க்கைத்திறன்

சூழ்நிலையை எதிர்கொள்ளும் திறன்

பேருந்தில் பயணம் செய்துகொண்டிருக்கிறீர்கள். உங்கள் தோள்மீது யாரோ கைவைப்பதாக உணர்கிறீர்கள். திரும்பிப் பார்த்தால் உங்களுக்கு அறிமுகமானவர்தான். அப்போது உங்கள் செயல்பாடு எப்படி இருக்கும்?

அ) அவர் தொடுவது எனக்குப் பிடிக்கும். அதனால் ஒன்றும் பேசாதிருப்பேன்.

ஆ) அவரை வாய்க்கு வந்தபடி திட்டுவேன்.

இ) அவரிடமிருந்து விலகிச் சென்றுவிடுவேன்.

இதுபோன்ற நிகழ்வு உங்களுக்கு எப்போதாவது ஏற்பட்டதுண்டா?

பொது இடங்களிலோ நீங்கள் தனியாக இருக்கும்போதோ யாரேனும் இவ்வாறு நடந்து கொண்டால், அவரது எண்ணத்தைச் சில குறிப்புகளால் அறிந்துகொண்டு, அவரிடமிருந்து விலகிச் செல்லுதல் வேண்டும். தனியாக இருக்கும் சூழ்நிலையைத் தவிர்ப்பதே நல்லது.

மதிப்புக்கல்வி

எளிமை

மதுரைக்குத் தொடர்வண்டியில் வந்து இறங்கினார் ஒருவர். குறித்த நேரத்திற்கு முன்பே தொடர்வண்டி வந்துவிட்டதால், அவரை வரவேற்க ஒருவரும் அங்கு இல்லை. அவர் யாருக்காகவும் காத்திராமல், தான் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விடுதிக்குச் சென்று அறையின் திறவுகோலைக் கேட்டார். ஆனால் அங்கிருந்தவர்களோ, ‘இந்த அறை தொடர்வண்டித்துறை அமைச்சர் ஒருவருக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளது, உங்களுக்குத் தரமுடியாது’ என்று மறுத்தார்கள்.

“ஐயா, அந்த அமைச்சரே நான்தான்’’ என்று அவர் கூறிய பிறகும்கூட அவர்கள், அதனை நம்ப மறுத்து, அவரை உள்ளே விடவில்லை. அவரின் எளிமையான தோற்றமே அதற்குக் காரணமாக இருந்தது. அதற்குள் அமைச்சர் மதுரைக்கு வந்துவிட்டார் என்ற தகவலை அறிந்துகொண்டவர்கள், அவரைப் பார்ப்பதற்காக அந்த இடத்திற்கு வந்தார்கள்; அவரை அறைக்கு உள்ளேவிட இசையாதவர்களைக் கடிந்துகொண்டார்கள். அவர் யார் தெரியுமா? அவர்தாம் லால்பகதூர் சாஸ்திரி. அவர், மிகப்பெரிய பதவியில் இருந்தும் எளிமையாக வாழ்ந்துகாட்டினார்.

1. எளிமையாக இருப்பது உங்களுக்குப் பிடிக்குமா?
2. பகட்டாக உடை, அணிகலன்கள் பிறர் அணிந்து செல்வதனைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
3. எளிமையாக இருப்பதனைப் பற்றி உனது கருத்து என்ன?

மொழியாக்கம் செய்க.

Your parents love you very much. They give you all that they have. It is to make you healthy, strong and happy. But some of you have no idea how tired they are sometimes. You think that everything is alright with them, for they do not complain. It is your daily duty to make life easy and pleasant for them. This will give you great joy and satisfaction.

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. One doth the act, another hath the blow.
   பழி ஓரிடம், பாவம் ஓரிடம்.
2. Every fox must at last pay his skin to the flayer.
   பல நாள் திருடன், ஒரு நாள் அகப்படுவான்.
3. Money makes many things.
   பணம் பத்தும் செய்யும்.
4. The day has eyes, the night has ears.
   பகலில் பக்கம் பார்த்துப் பேசு; இரவில் அதுவும் பேசாதே.
5. What comes from the cradle goes to the grave.
   தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்.

உமர்கய்யாம் பாடல்கள்

யாரும் சிறியர்; யான்பெரியன்;
எதிலும் சிறந்தது என்னலமாம்;
பாரில் எனக்கீ டில்லைஎனப்
பயனில் மொழிகள் பகர்வதும்ஏன்?
சேரும் உலகப் பொருளையெல்லாம்
தெரிய நோக்கித் தனைநோக்காச்
சீரில் அமைந்த கண்மணியின்
செயலை நோக்கித் தெளிவீரே! 1

பொருள் : நானே பெரியவன், மற்றவர் சிறியவர்; என் நலம் கருதுவதே சிறந்தது. எனக்கு நிகர் யாருமே இல்லை எனக் கூறுகின்றவர்களே! உலகப் பொருள்களையெல்லாம் காண்கின்ற கண்மணி, தன்னைக் காண்பதில்லை என்பதனை அறிந்தாவது தெளிவடையுங்கள்.

சொற்பொருள் : பகர்வது – சொல்வது; தெளிவீரே – தெளியுங்கள்.

இலக்கணக்குறிப்பு : நோக்கி – வினையெச்சம்.

*அன்பு செய்யின் அயலாரும்
அண்டி நெருங்கும் உறவினராம்;
அன்பு நீங்கின் உறவினரும்
அகன்று நிற்கும் அயலவராம்;
துன்ப நோயை நீக்கிடுமேல்
துவ்வா விடமும் அமுதாகும்;
துன்ப நோயை ஆக்கிடுமேல்
தூய அமுதம் விடமாமே! * 2

பொருள் : அன்பு செலுத்தினால் அயலாரும் நெருங்கிய உறவினராவர்; அன்பு நீங்கினால் உறவினரும் விலகி அயலாராவர். துன்பத்தை நீக்குமெனின் நஞ்சும் அமுதமாகும். துன்பத்தைத் தருமெனில் அமுதமும் நஞ்சாகும்.

சொற்பொருள் : துவ்வா – நுகராத; அகன்று – விலகி.

இலக்கணக்குறிப்பு : துவ்வா விடம் – ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.

ஆழி சூழும் உலகாளும்
அரச னாக வேண்டுமெனில்
வாழும் வாழ்வில் உன்னையும்நீ
மறந்து வாழ வேண்டுமடா!
ஏழை யாகி எளியவரின்
எளிய னாக வேண்டுமடா!
தோழ னாகி யாவர்க்கும்
தொண்ட னாக வேண்டுமடா! 3

பொருள் : நீ, கடல் சூழ்ந்த இவ்வுலகை ஆளும் அரசனாக விரும்பினால், தன்னலத்தை மறந்திடுதல் வேண்டும். ஏழையாகவும் எளியவருக்கு எளியவனாகவும், எல்லாருக்கும் தோழனாகவும் தொண்டனாகவும் வாழ்ந்திடுதல் வேண்டும்.

சொற்பொருள் : ஆழி – கடல்.

ஆசிரியர் குறிப்பு : கவிமணி தேசிக விநாயகனார் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தேரூரில் பிறந்தவர். இவரின் பெற்றோர் சிவதாணு – ஆதிலட்சுமி அம்மையார். இவர் உமர்கய்யாம் பாடல்களைத் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். அப்பாடல்களின் தொகுப்பு 'உமர்கய்யாம் பாடல்கள்' என்பது. உமர்கய்யாம் பதினோராம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரசீகக் கவிஞர். இவரது முழுப் பெயர் கியாதுதீன் அபுல்பாத் உமர்கய்யாம் என்பது. இவர் கணிதம், வானவியல் ஆகியவற்றில் புலமைமிக்கவர். இவரின் கவிதைகள் மக்கள் அடையும் இன்ப துன்பங்களையும், இறைவனது படைப்பையும் பாடுபொருளாகக் கொண்டவை.

இவர் இயற்றிய பிற நூல்கள்: மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம், குழந்தைச் செல்வம், ஆசிய ஜோதி முதலியன. இவரது காலம் 1876முதல் 1954ஆம் ஆண்டுவரை.

நூற்குறிப்பு : இந்நூல் இம்மை மறுமை பற்றி ரூபாயத் என்னும் பெயரில் உமர்கய்யாம் எழுதிய செய்யுள்களின் மொழிபெயர்ப்பு. இதனையே கவிமணி மொழிபெயர்த்துள்ளார். இதில், நூற்றுப் பதினைந்து பாடல்கள் உள்ளன. வாழ்க்கைத் தத்துவத்தை இப்பாடல்கள் விளக்குகின்றன. (ரூபாயத் – நான்கடிச் செய்யுள்)

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. அன்புசெய்யின் அயலாரும் அண்டி நெருங்கும் ______________.
2. துன்ப நோயை நீக்கிடுமேல் ______________ அமுதாகும்.
3. ஏழையாகி எளியவரின் ______________ ஆக வேண்டுமடா.

ஆ) சிறுவினாக்கள்

1. மக்கள் எதனையறிந்து தெளிவடையுமாறு கவிமணி கூறுகிறார்?
2. அன்பின் சிறப்பு யாது?
3. 'அமுதம் விடமாகும்' – எப்போது?
4. உலகை ஆள விரும்புபவர் வாழும் வழி யாது?
5. உமர்கய்யாம் பற்றி நீவிர் அறிவன யாவை?
6. கவிமணி பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

மணிமேகலை

– சீத்தலைச் சாத்தனார்

ஆபுத்திரன் நாடு அடைந்த காதை

முன்கதைச் சுருக்கம்

கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்த மகள் மணிமேகலை. முற்பிறப்பின் வினைப்பயன் காரணமாக அரசகுமாரனாகிய உதயகுமரன், மணிமேகலையை மணம்புரிய விரும்புகிறான்; மலர்வனத்திற்குச் சென்ற அவளைப் பின்தொடர்கிறான். மணிமேகலை அங்குள்ள பளிக்கறையில் சென்று மறைந்துகொள்கிறாள். அங்கிருந்த அவளை மணிமேகலா தெய்வம், மணிபல்லவத் தீவிற்கு வான்வழியே தூக்கிச் செல்கிறது. அங்குத் தனது பழம்பிறப்பை உணர்கிறாள் மணிமேகலை. மேலும் மணிமேகலா தெய்வம், அவளுக்குப் பசியற்றிருக்கவும் விரும்பும் உருவம் எடுக்கவும் வான்வழிச் செல்லவும் தேவையான மூன்று மந்திரங்களைத் தெரிவித்து மறைகிறது. தீவதிலகையின் உதவியால், அமுதசுரபியைப் பெற்றுப் புகார் நகரை அடைகிறாள். அங்கு, அறவணவடிகளின் அறிவுரைப்படி ஆதிரையிடம் முதன்முதலில் பிச்சையேற்றாள். அதன்மூலம் அமுதசுரபியில் அள்ள அள்ளக் குறையாத அன்னம் பெருகியது. அதனைக்கொண்டு பசிப்பிணி நீக்கும் அறப்பணியை மேற்கொள்கிறாள். அமுதசுரபி, முற்பிறப்பில் ஆபுத்திரனிடம் இருந்தது என்பதை அறிந்த மணிமேகலை அவனைக் காணும் பொருட்டு ஆபுத்திரன் நாட்டிற்குச் செல்வது, இங்குப் பாடப்பகுதியாக இடம்பெற்றுள்ளது.

அறவண அடிகள் வருகை

தேவியும் ஆயமும் சித்திரா பதியும்
மாதவி மகளும் மாதவர்க் காண்டலும்
எழுந்தெதிர் சென்றாங்கு இணைவளைக் கையால்
தொழுந்தகை மாதவன் துணையடி வணங்க
அறிவுண் டாகவென் றாங்கவன் கூறலும்

பொருள் : அறவண அடிகளைக் கண்ட அளவில் அரசமாதேவியும் தோழியர் கூட்டமும் சித்திராபதியும் மணிமேகலையும் எழுந்து, அவர் எதிரே சென்றனர். வணங்கும் தகுதியுடைய அறவணரின் இருபாதங்களைத் தம் இருகைகளாலும் தொட்டு வணங்கினர்; அடிகள் 'அறிவுண்டாகுக' என அவர்களை வாழ்த்தினார்.

சொற்பொருள்: ஆயம் – தோழியர் கூட்டம்.

இலக்கணக்குறிப்பு : தேவியும் ஆயமும் – எண்ணும்மை.

பிரித்தறிதல் : எழுந்தெதிர் – எழுந்து + எதிர்; அறிவுண்டாக – அறிவு + உண்டாக.

திருவடி விளக்கல்

இணைவளை நல்லாள் இராசமா தேவி
அருந்தவர்க் கமைந்த ஆசனம் காட்டித்
திருந்தடி விளக்கிச் சிறப்புச் செய்தபின்
யாண்டுபல புக்கநும் மிணையடி வருந்தஎன்
காண்டகு நல்வினை நும்மையீங்கு அழைத்தது 10

பொருள் : வளையல்கள் அணிந்த கைகளையுடைய அரசமாதேவி, தவமுனிவரான அறவண அடிகளை உரிய இருக்கையில் உட்காரச் செய்தாள்; அவரது திருவடிகளைக் கழுவிச் சிறப்புச் செய்தாள். "எனது நல்வினையின் பயன்தான், நான் காணுதற்காகத் தங்கள் இணையடி வருந்துமாறு இத்துணைத் தொலைவு தங்களை நடந்துவரச் செய்தது" என்றாள்.

சொற்பொருள் : ஆசனம் – இருக்கை.

இலக்கணக்குறிப்பு : அருந்தவர், நல்வினை – பண்புத்தொகைகள்.

வரவேற்புரை

நாத்தொலை வில்லை யாயினும் தளர்ந்து
மூத்தவிவ் யாக்கை வாழ்கபல் லாண்டெனத்
தேவி கேளாய் செய்தவ யாக்கையின்
மேவினே னாயினும் வீழ்கதிர் போன்றேன்
பிறந்தார் மூத்தார் பிணிநோ யுற்றோர்
இறந்தார் என்கை இயல்பே இதுகேள் 16

பொருள் : தங்களது சொல்லில் சோர்வில்லை; எனினும், மூப்பினால் தளர்வுற்று மெலிந்த தங்களது உடல் பன்னெடுநாள் வாழ்வதாகுக என வாழ்த்தினாள், அரசமாதேவி. அறவண அடிகள், "அரசமாதேவியே! இதைக் கேட்பாயாக. தவம் செய்யும் உடலைக் கொண்டுள்ளேன்; ஆயினும், நாள்தோறும் தோன்றிமறையும் கதிரவனைப் போன்றவன்தான் நானும். உலகில் பிறந்தோர் அனைவரும் மூப்பினாலும் பிணியினாலும் ஒருநாள் இறந்துபோவர் என்பது இயற்கையே" என்றார்.

சொற்பொருள் : நாத்தொலைவில்லை – சொல் சோர்வின்மை; யாக்கை – உடம்பு; பிணிநோய் – நீங்கா நோய்.

இலக்கணக்குறிப்பு : வாழ்க – வியங்கோள் வினைமுற்று; செய்தவம், வீழ்கதிர் – வினைத் தொகைகள்.

பகுபத உறுப்பிலக்கணம் : பிறந்தார் – பிற + த் (ந்) + த் + ஆர்; பிற – பகுதி, த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம், த் – இறந்தகால இடைநிலை, ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : நாத்தொலைவில்லை – நா + தொலைவு + இல்லை; பிணிநோயுற்றோர்– பிணி + நோய் + உற்றோர்.

தானம் அறிந்தோர்

பேதைமை செய்கை உணர்வே அருவுரு
வாயில் ஊறே நுகர்வே வேட்கை
பற்றே பவமே தோற்றம் வினைப்பயன்
இற்றென வகுத்த இயல்பீ ராறும்
பிறந்தோ ரறியின் பெரும்பேறு அறிகுவர்
அறியா ராயின் ஆழ்நரகு அறிகுவர். 22

பொருள் : அறியாமை, கன்மம், உணர்வு, அருவஉருவம், ஐம்பொறிகள், பொறிகளின் இயல்பு, இன்ப துன்ப நுகர்ச்சி, விருப்பம், புலன்களின் பற்று, பயன்தரு முறையைச் சார்தல், பிறத்தல், வினைப்பயன் ஆகிய பன்னிரண்டு இயல்புகளையும் மக்களாய்ப் பிறந்தோர் அறிவராயின் பெரும்பேறு பெற்றவராவர். அதனை அறியாதவர் துன்பம் நிறைந்த நரகத்தையே அடைவர்.

சொற்பொருள் : பேதைமை – அறியாமை; செய்கை – இருவினை; உணர்வு – அறிவியல் சிந்தனை; அரு – உருவமற்றது; உரு – வடிவம்; வாயில் – ஐம்பொறிகள்; ஊறு – புலன்களின் இயல்பு; நுகர்வு – இன்ப துன்ப நுகர்ச்சி; வேட்கை – விருப்பம்; பவம் – பயன் நோக்கிய செயல்; தோற்றம் – பிறப்பு.

இலக்கணக்குறிப்பு : பெரும்பேறு – பண்புத்தொகை.

பகுபத உறுப்பிலக்கணம் : அறிகுவர் – அறி + கு + வ் + அர். அறி – பகுதி, கு – சாரியை, வ் – எதிர்கால இடைநிலை, அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

பிரித்தறிதல் : இயல்பீராறு – இயல்பு + இரண்டு + ஆறு.

பேதைமை

பேதைமை யென்பது யாதென வினவின்
ஓதிய இவற்றை உணராது மயங்கி
இயற்படு பொருளால் கண்டது மறந்து
முயற்கோ டுண்டெனக் கேட்டது தெளிதல். 26

பொருள் : பேதைமை எனப்படுவது அறியாமை. அதாவது, முற்கூறிய இயல்புகளை அறியாமல் அறிவு மயங்குதல்; இயற்கையாய்த் தோன்றும் பொருள்களிலும் தாம் கண்டதை மறந்து, முயலுக்குக் கொம்புண்டு எனப் பிறர் கூறும் பொய்யை மெய்யென நம்புதல் போன்றது.

சொற்பொருள் : பெரும்பேறு – வீடுபேறு; கோடு – கொம்பு.

இலக்கணக்குறிப்பு : ஆழ்நரகு – வினைத்தொகை; தெளிதல் – தொழிற்பெயர்.

பிறப்பும் வினையும்

உலகம் மூன்றினும் உயிராம் உலகம்
அலகில பல்லுயிர் அறுவகைத் தாகும்
மக்களும் தேவரும் பிரமரும் நரகரும்
தொக்க விலங்கும் பேயும் என்றே
நல்வினை தீவினை என்றிரு வகையாற்
சொல்லப் பட்ட கருவினுள் தோன்றி
வினைப்பயன் விளையுங் காலை உயிர்கட்கு
மனப்பே ரின்பமும் கவலையும் காட்டும். 34

பொருள் : மூவுலகிலும் எண்ணற்ற உயிர்கள் வாழ்கின்றன. அவ்வுயிர்கள் மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்குத்தொகுதி, பேய் என்னும் அறுவகைத்தாகும். அவை தாம் செய்த நல்வினை, தீவினையால் அறுவகைப்பட்ட உயிர்களுள் ஒன்றாகப் பிறக்கின்றன. அவ்வினைப் பயன்கள் உண்டாகும்போது பேரின்பங்களையும் துன்பங்களையும் அவை அடைகின்றன.

சொற்பொருள்: அலகில – அளவற்ற; தொக்க விலங்கு – விலங்குத்தொகுதி.

இலக்கணக்குறிப்பு : பல்லுயிர், நல்வினை, தீவினை, பேரின்பம் – பண்புத்தொகைகள்.

பத்துக் குற்றங்கள்

தீவினை யென்பது யாதென வினவின்
ஆய்தொடி நல்லாய் ஆங்கது கேளாய்
கொலையே களவே காமத் தீவிழைவு
உலையா உடம்பில் தோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும் 40

பொருள் : ஆராய்ந்தெடுத்த அழகிய வளையல்களை அணிந்த நங்கையே, கேட்பாயாக. தீவினை என்பது என்னவெனில் கொலை, களவு, காமமெனும் கொடிய விருப்பம் ஆகிய உடலில் தோன்றும் மூன்றும்; பொய்பேசுதல், புறங்கூறுதல், கடுஞ்சொல், பயனற்றசொல் எனச் சொல்லில் தோன்றும் நான்கும்.

சொற்பொருள் : களவு – திருட்டு; காமத்தீ – காமமெனும் கொடிய விருப்பம்; உலையா உடம்பு – தளராத உடல்; குறளை – புறம்பேசுதல்.

இலக்கணக் குறிப்பு : ஆய்தொடி நல்லாய் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கதொகை; காமத்தீ – உருவகம்; கடுஞ்சொல் – பண்புத்தொகை.

பகுபத உறுப்பிலக்கணம் : தோன்றுவர் – தோன்று + வ் + அர். தோன்று – பகுதி, வ் – எதிர்கால இடைநிலை, அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்று
உள்ளந் தன்னின் உருப்பன மூன்றுமெனப்
பத்து வகையால் பயன்தெரி புலவர்
இத்திறம் படரார் படர்குவர் ஆயின்
விலங்கும் பேயும் நரகரும் ஆகிக்
கலங்கிய உள்ளக் கவலையில் தோன்றுவர். 46

பொருள் : பேரவா, கடுஞ்சினங்கொள்ளுதல், தெளிவிலா அறிவு என உள்ளத்தில் தோன்றும் மூன்றும் ஆகிய பத்துக் குற்றங்களுமாம். இத்தீவினைப்பயனை அறிந்த அறிஞர், இத்தகு நெறியில் செல்லார். தீநெறியில் செல்வோர் விலங்காகவும் பேயாகவும் நரகராகவும் பிறந்து கவலைக்கு உட்படுவர்.

சொற்பொருள் : வெஃகல் – விரும்புதல்; வெகுளல் – சினத்தல்; பொல்லாக் காட்சி – மாயத் தோற்றம்.

இலக்கணக்குறிப்பு : பொல்லாக் காட்சி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; பயன் தெரிபுலவர் – வினைத்தொகை.

பகுபத உறுப்பிலக்கணம் : படர்குவர் – படர் + கு + வ் + அர். படர் – பகுதி, கு – சாரியை, வ் – எதிர்கால இடைநிலை, அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

நல்வினைப்பயன்

* நல்வினை யென்பது யாதென வினவின்
சொல்லிய பத்தின் தொகுதியின் நீங்கிச்
சீலம் தாங்கித் தானம் தலைநின்று
மேலென வகுத்த ஒருமூன்று திறத்துத்
தேவரும் மக்களும் பிரமரு மாகி
மேவிய மகிழ்ச்சி வினைப்பயன் உண்குவர். * 52

பொருள் : நல்வினைப் பயன் எதுவெனின், பத்துவகைக் குற்றங்களிலிருந்தும் நீங்கி ஒழுக்கத்தை மேற்கொள்வதும் பிறருக்குக் கொடையளிப்பதும் ஆகும். அத்தகையோர் உயர்வுடைய உயிர்கள் என வகுக்கப்பட்ட தேவர், மக்கள், பிரமர் ஆகிய மூவகையினராகப் பிறந்து தாம் செய்த நல்வினைப் பயனை நுகர்வர்.

சொற்பொருள் : சீலம் – ஒழுக்கம்; தானம் – கொடை.

பகுபத உறுப்பிலக்கணம் : உண்குவர் – உண் + கு + வ் + அர்; உண் – பகுதி; கு – சாரியை; வ் – எதிர்கால இடைநிலை; அர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

நல்லறம் போற்றுக

அரைசன் தேவியொ டாயிழை நல்லீர்
புரைதீர் நல்லறம் போற்றிக் கேண்மின்
மறுபிறப் புணர்ந்த மணிமே கலைநீ
பிறவறங் கேட்ட பின்னாள் வந்துனக்கு
இத்திறம் பலவும் இவற்றின் பகுதியும்
முத்தேர் நகையாய் முன்னுறக் கூறுவல்
என்றவன் எழுதலும் இளங்கொடி எழுந்து 59

பொருள் : அரசமாதேவியுடன் இருக்கும் நங்கையரே! நான் கூறும், குற்றம் நீங்கிய நல்லறத்தைப் போற்றிக் கேளுங்கள்! எனக் கூறிய அறவண அடிகள், மணிமேகலையை நோக்கி, "முத்துச்சிரிப்பினையுடைய மணிமேகலையே! நீ உனது முற்பிறப்பினை உணர்ந்திருக்கிறாய். மேலும், பிறசமயங்கள் கூறும் அறங்களையும் நீ கேட்டறிந்து கொள். அதன் பின்னர், ஒரு நாள் மீண்டும் வந்து உனக்குப் பல்வேறு அறங்களையும் அவற்றின் பகுதிகளையும் கூறுவேன்" என்றார்.

சொற்பொருள் : புரைதீர் – குற்றம் தீர்ந்த; கேண்மின் – கேளுங்கள்; முத்தேர் நகை – முத்துச் சிரிப்பு.

மணிமேகலையின் அறிவிப்பு

நன்றறி மாதவன் நல்லடி வணங்கித்
தேவியும் ஆயமும் சித்திரா பதியும்
மாதவர் நன்மொழி மறவா தும்மின்
இந்நகர் மருங்கின்யா னுறைவேன் ஆயின்
மன்னவன் மகற்கிவள் வருங்கூற்று என்குவர்
ஆபுத் திரனா டடைந்ததற் பின்னாள்
மாசில் மணிபல் லவம்தொழு தேத்தி
வஞ்சியுட் புக்கு மாபத் தினிதனக்கு
எஞ்சா நல்லறம் யாங்கணுஞ் செய்குவல்
எனக்கிடர் உண்டென்று இரங்கல் வேண்டா
மனக்கினி யீர் 70

பொருள்: மணிமேகலை எழுந்து, 'தேவியர்களும் ஆயமகளிரும் சித்திராபதியுமாகிய நீங்கள் அறவணரின் நல்ல மொழிகளைப் போற்றி நற்கதியடையுங்கள். இந்நகரில் நான் தங்கினால், மன்னவன் மகனுக்கு வந்த கூற்றுவன் என்று என்னைப் பலரும் கூறுவர். ஆகையால், நான் ஆபுத்திரன் நாட்டை அடைந்து, பின்னர் அங்கிருந்து குற்றமற்ற மணிபல்லவத் தீவிற்குச் சென்று பாதபீடிகையை வணங்குவேன். வஞ்சிமாநகருக்குச் சென்று பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்குக் குறைவற்ற நல்லறத்தினைச் செய்துகொண்டிருப்பேன். என் மனத்திற்கு இனியவர்களே, எனக்கு இன்னல் உண்டாகுமென்று யாரும் வருந்தவேண்டாம்' என்று கூறினாள்.

சொற்பொருள்: உய்ம்மின் – போற்றுங்கள், நற்கதியடையுங்கள்; உறைதல் – தங்குதல்; கூற்று – எமன்; மாசில் – குற்றமற்ற; தொழுது – வணங்கி; புக்கு – புகுந்து; இடர் – இன்னல்.

பிரித்தறிதல்: நன்மொழி = நன்மை + மொழி; எனக்கிடர் – எனக்கு + இடர்; தொழுதேத்தி – தொழுது + ஏத்தி; உண்டென்று – உண்டு + என்று; நல்லறம் – நன்மை + அறம்.

ஐம்பெருங்காப்பியங்கள்
- சிலப்பதிகாரம்
- மணிமேகலை
- சீவகசிந்தாமணி
- வளையாபதி
- குண்டலகேசி

இலக்கணக்குறிப்பு: அரைசன் – இடைப்போலி; நல்லறம் – பண்புத்தொகை.

ஆசிரியர் குறிப்பு : கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றியது மணிமேகலை. சாத்தன் என்பது இவரது இயற்பெயர். இவர், திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர்; கூலவாணிகம் (கூலம் – தானியம்) செய்தவர். இக்காரணங்களினால், இவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று வழங்கப்பெற்றார். இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவராவர். இவர் கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவர். தண்டமிழ் ஆசான், சாத்தன் நன்னூற்புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார். இவரது காலம் கி.பி.இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

நூற்குறிப்பு : மணிமேகலை, ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. சிலப்பதிகாரமும் மணிமேகலையும் வெவ்வேறு நூல்களாயினும் ஒரே கதைத் தொடர்புடையன. எனவே, இவை இரட்டைக்காப்பியங்கள் என வழங்கப்பெறும். மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதால், இந்நூலுக்கு மணிமேகலைத் துறவு என்னும் வேறு பெயரும் உண்டு. இந்நூல் சொற்சுவையும் பொருட்சுவையும், இயற்கை வருணனைகளும் நிறைந்தது; பௌத்தமதச் சார்புடையது; முப்பது காதைகளைக் கொண்டது. முப்பது காதைகளுள், பாடப் பகுதியான ஆபுத்திரன் நாடு அடைந்த காதை இருபத்து நான்காவது காதை.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. உரிய எழுத்தைத் தேர்ந்தெழுதுக.

1. மாதவி மக ___ ம் மாதவர்க் காண்ட ___ ம் (லு/ளு/ழு)
2. வினைப்பயன் வி ___ யும் கா ___ (லை/ளை/ழை)
3. கொ ___ யே களவே காமத்தீ வி ___ வே (லை/ளை/ழை)
4. கலங்கிய உ ___ ளக் கவலையி ___ தோன்றுவர். (ல்/ள்/ழ்)

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. 'அருந்தவர்க் கமைந்த ஆசனம் ......' – இவ்வடியில் 'அருந்தவர்' எனக் குறிப்பிடப்படுபவர் ___________.
2. சொல்லில் ஏற்படும் குற்றங்கள் ___________.
3. மனத்தில் தோன்றும் குற்றங்கள் ___________.
4. மறுபிறப்பு உணர்ந்தவளாகக் குறிப்பிடப்படுபவள் ___________.

3. பொருத்துக.

ஆயம்	–	விருப்பம்
வெகுளல்	–	குற்றம் நீங்கிய
புரைதீர்	–	புறங்கூறல்
குறளை	–	சினத்தல்
வேட்கை	–	தோழியர் கூட்டம்

ஆ) குறுவினாக்கள்

1. அறவண அடிகளைக் கண்டதும் அவையினர் என்ன செய்தனர் ?
2. உலகவாழ்வு நிலை இல்லாதது என்பதனை அறவண அடிகள் எவ்விதம் விளக்கினார் ?
3. பேதைமை எனப்படுவது யாது ?
4. உயிர்களின் பிறப்பிற்கான காரணமாக மணிமேகலை கூறுவது யாது ?
5. சொல்லில் தோன்றும் குற்றங்கள் யாவை ?
6. நல்வினைப் பயனை அடைபவர் யார் ?
7. பெரும்பேறு யாருக்குக் கிட்டும் ?

இ) சிறுவினாக்கள்

1. மணிமேகலை – நூற்குறிப்பு எழுதுக.
2. சீத்தலைச்சாத்தனார் – குறிப்பு எழுதுக.
3. பத்துவகைக் குற்றங்கள் யாவை ?
4. பிறப்பிற்கும் வினைப்பயனுக்கும் உள்ள தொடர்பு யாது ?

ஈ) நெடுவினாக்கள்

1. தீவினை என்பது யாது ?
2. நல்வினை, தீவினை இவற்றின் பயனாக மணிமேகலை கூறுவன யாவை ?

உணவே மருந்து

மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது உணவு. மக்கள் உண்ணும் உணவும் உணவுப் பழக்கவழக்கங்களுமே அவர்களது உடல் நலத்தைத் தீர்மானிக்கின்றன. தமிழர் மருத்துவத்தில் உணவு என்பது அனைத்து நோய்களையும் தீர்க்கக்கூடிய சஞ்சீவி மருந்தாகக் கருதப்படுகிறது. இயற்கை உணவுமுறையினையும் இயற்கையோடு இயைந்த பழக்க வழக்கங்களையும் கடைப்பிடிப்பதன்மூலம் உடல் நலத்தையும் உளநலத்தையும் பாதுகாக்கமுடியும் என மருத்துவர் பரிந்துரைக்கின்றனர்.

இன்று சமையல் முறைகள் நாட்டுக்கு நாடு, மாநிலத்திற்கு மாநிலம், மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபடுகின்றன. உணவகங்கள் பெருகியுள்ளன. சத்துக்காக அன்றிச் சுவைக்காக உண்ணும் நடைமுறை மிகுந்திருக்கிறது. அட்டைப்பெட்டிகளிலும் தாள் பைகளிலும் பதப்படுத்தி அடைத்த ஆயத்த உணவுவகைகள், விரைவு உணவுகள், வழக்கத்திற்கு வந்துள்ளன. நாகரிக வளர்ச்சி, பண்பாட்டுப் பரவல், இனக்கலப்பு, புதுமையெனச் சுவைகூட்டும் ஆவலில் நோயைப் பெருக்கிக்கொண்டிருக்கிறோம். உணவே மருந்து என்னும் நிலைமாறி, மருந்தே உணவு என்னும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்.

உணவின் இன்றியமையாமை

உண்டி முதற்றே உலகு என்பது நாமறிந்தது. உணவு, உடலுக்கு வலிமையைத் தருவது; வளர்ச்சியளிப்பது; உணவு, வாழ்க்கைக்கு அடிப்படையாக இருப்பதுடன் கொள்கைகள், பழக்க வழக்கங்கள், நாகரிகம், சமூக அமைப்பு, வாழ்க்கைத் தரம் முதலியவற்றிலும் மாறுபாடுகளை உண்டாக்கவல்லது. அஃது உடலையும் உயிரையும் வளர்க்கும் அமுதமாகும். பசி வந்திடப் பத்தும் பறந்துபோம் என்பது உலகறிந்த உண்மை. எனவேதான், பசியின் கொடுமையைப் பசிப்பிணி என்னும் பாவி என்றது மணிமேகலைக் காப்பியம். இப்பிணிக்கு மருந்து உணவே. ஆதலால்தான், உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே எனப் புறநானூறும் மணிமேகலையும் கூறுகின்றன.

உணவே மருந்து

உயிர், உடலோடுகூடிய நிலையில் எப்போதும் புறச்சூழலோடு போராடி வருகிறது. அதில் வெற்றியடைவதே உடல்நலமாகும்; தோல்வி அடைந்தால் நோயில் முடியும். அந்நோயைத் தீர்த்து இன்பமளிப்பதே மருந்து.

திருக்குறளில் மருந்து என்னும் அதிகாரத்தில் உணவே மருந்தாகும் தன்மையைத் திருவள்ளுவர் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். உண்ட உணவு, செரித்தபின்னரே மீண்டும் உண்ணவேண்டுமெனத் தமிழ் மருத்துவம் கூறுகிறது. முன் உண்டது செரித்தது கண்டு உண்பார்க்கு மருந்துண்ணும் தேவை ஏற்படாது.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின். – குறள், 942

என்பது வள்ளுவர் வாக்கு. எனவே, உடல்நலத்திற்குப் பொருந்திய உணவு எது? பொருந்தா உணவு எது? என ஆராய்ந்து, தெளிந்து உணவு முறையை வகுத்துக்கொண்டால், உடலுக்கு ஊறுசெய்யும் நோய்கள் நம்மை அணுகா.

தமிழகத்து உணவு, தொன்றுதொட்டு மருத்துவமுறையில் சமைக்கப்படுகிறது. வெப்ப நாடான நமது நாட்டுச் சமையலுக்குப் புழுங்கலரிசியே ஏற்றது. அன்றாடச் சமையலில் கூட்டுவனவற்றுள் மஞ்சள், நெஞ்சிலுள்ள சளியை நீக்கும். கொத்துமல்லி, பித்தத்தைப் போக்கும். சீரகம், வயிற்றுச் சூட்டைத்தணிக்கும். மிளகு, தொண்டைக் கட்டைத் தொலைக்கும். பூண்டு, வளியகற்றி வயிற்றுப்பொருமலை நீக்கிப் பசியை மிகுக்கும். வெங்காயம் குளிர்ச்சி உண்டாக்கிக் குருதியைத் தூய்மைப்படுத்தும்.

பெருங்காயம், வளியை வெளியேற்றும். இஞ்சி, பித்தத்தை ஒடுக்கிக் காய்ச்சலைக் கண்டிக்கும். தேங்காய், நீர்க்கோவையை நீக்கும். கறிவேப்பிலை, மணமூட்டி உணவு விருப்பை உண்டாக்கும். நல்லெண்ணெய் கண் குளிர்ச்சியும் அறிவுத்தெளிவும் உண்டாக்கும். சீரகம் பூண்டு கலந்த மிளகு நீர், சூட்டைத் தணித்துச் செரிமான ஆற்றலை அதிகரிக்கும். உடலுக்கு வலிவூட்டவும் கழிவு அகலவும் கீரை நல்லது.

தவிர்க்க வேண்டியன

நோய்க்கு முதல் காரணம் உப்பு. இதனைக் குறைவாகச் சேர்த்தல் நன்று. உப்பு நிறைந்த பொருள்களான ஊறுகாய், அப்பளம், வடாம், கருவாடு, முந்திரிப்பருப்பு, வறுத்த உருளைச் சீவல், வாழைக்காய்ச் சீவல், புளித்தமோர் முதலியனவற்றை முழுவதுமாகத் தவிர்த்தல் வேண்டும்.

கொழுப்பு நிறைந்த இறைச்சிகள், முட்டையின் மஞ்சள் கரு, தயிர், நெய், வெண்ணெய், பாலாடை, பனிக்கூழ், இனிப்புக்கட்டி ஆகியவற்றை நீக்குதல் வேண்டும். காரமும் புளிப்பும் கொண்ட உணவுகள் கூடா. எண்ணெயில் வறுத்த, பொரித்த உணவுகளை ஒதுக்குதல் நன்று. நொறுக்குத் தீனி வயிற்றுக்குக் கேடு என்பது பழமொழி. நொறுக்குத் தீனி கூடவே கூடாது. இடையிடையே எதனையாவது தின்பதும் கொறிப்பதும் நல்லது இல்லை.

உண்ணும் முறை

எளிதில் செரிக்கக் கூடிய பழம், காய், பருப்பு, அரிசி, கோதுமை, பால் இவற்றையே குடல் ஏற்றுக்கொள்கிறது. நாச்சுவை கருதி உண்ணாமல், உடல்நலங்கருதி உண்ணுதலே நல்லது. உணவை விரைவாக விழுங்கக்கூடாது; நன்றாக மென்று விழுங்குதல் வேண்டும். அப்போதுதான் வாயிலுள்ள உமிழ்நீர் வேண்டிய அளவு சுரந்து உணவுடன் கலக்கும். உமிழ்நீர் கலக்காத உணவு உள்ளே சென்றாலும், அது செரிக்காது; குடலும் தன் செரிமான ஆற்றலை இழந்துவிடும். உணவின் சத்துகள் வீணாகாமல் பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். காய்கறிகளை முக்கால் வேக்காட்டில் வேகவைத்து உண்ணல் வேண்டும். வேகவைத்த காய்கறி நீரில் மிகுதியான சத்துகள் இருப்பதனால் அதனை உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

நொறுங்கத் தின்றால் நூறு வயது

தண்ணீரும் மருந்தே

நீரின்றமையாது உலகு என்பது வள்ளுவம். இயற்கை உணவுப்பொருள்களில் நீரில்லாத உணவுப்பொருள்களே இல்லை. எல்லாவகையான உணவுப் பொருள்களும் விளைவதற்குக் காரணமாக அமைவது நீர். உண்ட உணவு குருதியுடன் கலப்பதற்கும் குருதி தூய்மை அடைவதற்கும் உடலிலுள்ள கழிவுப்பொருள்கள் வெளியேறுவதற்கும் நீர் இன்றியமையாதது. எனவே, நீரைத் தேவையான (நாளொன்றுக்குக் குறைந்தது மூன்று லிட்டர்) அளவுக்குக் குடித்தல் உடலுக்கு நல்லது. உணவு உண்ணும்போது இடையில் நீர் குடித்தல் கூடாது.

சமச்சீர் உணவு

ஒருவர் உட்கொள்ளும் உணவில் புரதம், கொழுப்பு, மாச்சத்து, கனிமங்கள், நுண்ணூட்டச் சத்துகள் சேர்ந்ததே சமச்சீர் உணவு. எனவே, அளவறிந்து உண்ண வேண்டியது ஒவ்வொருவரின் கடமை. சோறும் காய்கறியும் அரைவயிறு; பால், மோர், நீர் கால்வயிறு; கால்வயிறு வெற்றிடமாக இருத்தல் வேண்டும். வயிறு புடைக்க உண்ணுதல் நோய்க்கு இடமளிக்கும். எனவே, ஔவையார் **மீதூண் விரும்பேல்** என்றார்.

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு என்பது பழமொழி.

வயது ஏறும்போது கொழுப்புச்சத்துள்ள உணவின் அளவைச் சிறிது சிறிதாகக் குறைத்துக்கொண்டே வருதல்வேண்டும். உணவைக் கட்டுப்படுத்துவதோடு எளிய உடற்பயிற்சிகளையும் செய்தல்வேண்டும். நடைப்பயிற்சியே எளிய உடற்பயிற்சி. 'நாள்தோறும் தவறாமல் நடந்தால் நோய் நம்மைவிட்டு நடக்கும்; ஓடினால் நோய் நம்மைவிட்டு ஓடும்; எப்போதும் படுத்துக் கிடந்தால் நோய் நம்மீது படுத்துக்கொள்ளும்.

காலை மாலை உலாவி நிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத்தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே. – கவிமணி

உடல் நலனை விரும்புவோர் முறையான உணவுப் பழக்கத்தை மேற்கொண்டால் நெடுநாள் நலமாக வாழலாம். உண்பதற்காக வாழாமல், வாழ்வதற்காக உண்டால் மருந்தென்பதே உடலுக்குத் தேவை இல்லை. திருமூலரும் உடலைக் காத்தலின் தேவையை வலியுறுத்தியுள்ளார். நாடு நலம்பெற நல்லுடல் பெற்ற மக்கள் தேவை. நல்லுடல் பெற நல்லுணவுமுறையை மேற்கொள்ளுதல் வேண்டும்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.
– திருமூலர்

அறுசுவையின் பயன்கள்

இனிப்பு – வளம்	கார்ப்பு – உணர்வு
துவர்ப்பு – ஆற்றல்	உவர்ப்பு – தெளிவு
கைப்பு – மென்மை	புளிப்பு – இனிமை

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. அடிப்படைத் தேவைகளுள் முதன்மையானது ______________ .
2. பசிப்பிணிக்கு உணவே ______________ .
3. நோய்க்கு முதல் காரணம் ______________ .
4. மீதூண் விரும்பேல் எனக் கூறியவர் ______________ .

ஆ) குறுவினாக்கள்

1. ‘மருந்தே உணவு’ என்னும் நிலை ஏன் ஏற்பட்டுள்ளது ?
2. உணவு உடலை வளர்க்கும் ஆதாரம் – ஏன் ?
3. உடல்நலமாவது யாது ?
4. உடற்பயிற்சியின் நன்மைகள் யாவை ?

இ) சிறுவினாக்கள்

1. திருக்குறள் உணவு மருந்தாகும் தன்மையை எவ்விதம் விளக்குகிறது ?
2. தவிர்க்கவேண்டிய உணவுப்பொருள்கள் யாவை ?
3. தண்ணீரும் மருந்தே – விளக்குக.

ஈ) நெடுவினாக்கள்

1. மருந்தாகும் உணவுப்பொருள்கள் பற்றி எழுதுக.
2. உணவு உண்ண வேண்டிய முறையை விளக்குக.

நோய் நீக்கும் மூலிகைகள்

(தாமரையும் பொற்கொடியும் கடைத்தெருவிற்குச் செல்கின்றனர். திரும்பும் வழியில்...)

தாமரை : அம்மா, அதோ பாருங்கள். மூலிகைக்கண்காட்சி நடந்துகொண்டிருக்கிறது. நாமும் போய் பார்க்கலாமா, அம்மா ?

பொற்கொடி : சரி வா, தாமரை! அங்கே என்ன இருக்கிறது என்று பார்த்து வரலாம்.

(இருவரும் உள்ளே செல்கின்றனர். அங்கு மூலிகைகளின் மகத்துவத்தைப் பற்றி மருத்துவர்கள் மக்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்கள்.)

பொற்கொடி : ஐயா, வணக்கம்! நாங்கள் நகர்ப்பகுதியிலே வாழ்பவர்கள். இங்குள்ள மூலிகைகள்பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது, கொஞ்சம் விளக்கமுடியுமா ?

மருத்துவர் : தெளிவாகவே சொல்கிறேன்.

மூலிகை என்றாலே பலரும் ஏதோ கிடைத்தற்கரிய பொருள் என எண்ணுகின்றனர். ஆனால், இவை எளிதில் நமக்கு மிக அருகிலேயே கிடைப்பன; மருத்துவப் பயன் மிக்கன. இதனை அனைவரும் அறிய வேண்டும் என்னும் நோக்கிலேயே இதுபோன்ற கண்காட்சிகளை நடத்தி வருகிறோம். இம்மூலிகைகள் எல்லாவித நோய்களையும் நீக்கும் தன்மையுடையன என்பதுடன் பின்விளைவுகளை ஏற்படுத்துவதில்லை என்பதும் இவற்றின் சிறப்பாகும்.

பொற்கொடி : இங்குள்ள மூலிகைகள் எந்த நோயை நீக்கப் பயன்படுகின்றன என்பதனைத் தெளிவாகக் கூறுங்கள், ஐயா.

மருத்துவர் : நல்லது. இந்தச் செடியைப் பாருங்கள்.

தாமரை : இது துளசிச்செடிதானே!

மருத்துவர் : சரியாகச் சொன்னாய். இது துளசிதான். வீடு, தோட்டம், நந்தவனங்களில் எளிதில் காணக்கிடைக்கும் துளசிச்செடியின் இலைகளை நீரிலிட்டுக் கொதிக்கச் செய்து ஆவிபிடித்தால் மார்புச்சளி, நீர்க்கோவை, தலைவலி நீங்கும். இதன் இலைகளை எலுமிச்சம்பழச் சாற்றுடன் அரைத்துப்போடப் படை நீங்கும்; விதைகளைப் பொடி செய்து ஒன்று அல்லது இரண்டு கிராம் அளவு உண்டால் உடற்சூடு, நீரெரிச்சல் ஆகியன அடங்கும்.

பொற்கொடி : இது என்ன செடி, ஐயா?

மருத்துவர் : இது கீழ்க்காய்நெல்லி. இதனைக் கீழாநெல்லி, கீழ்வாய்நெல்லி எனவும் குறிப்பிடுவர். மஞ்சட்காமாலைக்கு எளிய மருந்தாக இன்றும் பயன்பட்டு வருகிறது.

தாமரை : இதனை எவ்வாறு உட்கொள்ளவேண்டும்?

மருத்துவர் : காய்களுடன் கூடிய முழுக் கீழாநெல்லிச்செடியைத் தூயநீரில் கழுவி அரைத்து விழுதாக்கிக் கொள்ளுதல் வேண்டும். ஐம்பது கிராம் அளவுள்ள விழுதை இருநூறு மில்லி லிட்டர் எருமைத்தயிருடன் கலந்து காலை ஆறு மணியளவில்வெறும்வயிற்றில் உட்கொள்ளுதல் வேண்டும். இவ்வாறு மூன்று நாள் தவிராமல் உட்கொண்டால் மஞ்சட்காமாலை நோய் தீரும். மருந்துண்ணும் நாளில் மோரும், மோர்ச்சோறும் உட்கொள்வது நல்லது. கீழாநெல்லி இலைகளைக் கற்கண்டுடன் சேர்த்து அரைத்து மூன்றுகிராம் அளவு காலை மாலை இருவேளை நான்குநாள் தொடர்ந்து உட்கொள்ள சிறுநீர் தொடர்பான நோய்கள்நீங்கும்.

(தாமரை, ஓர் இலையைத் தொட அதிலிருந்த முள், அவள் கையைக் குத்தியது.)

தாமரை : ஆ! முள் குத்திவிட்டது, இந்த முள்செடியும் மூலிகையா, ஐயா?

மருத்துவர் : இது செடியில்லை. ஒருவகைக் கொடி. தூதுவளை என இதற்குப்பெயர். தோட்டங்களிலும், வேலியோரங்களிலும் இயல்பாக வளரும் இக்கொடியிலும் இலைகளிலும் கொக்கிபோன்ற சிறுமுள்கள் உண்டு. இது தூதுளை, சிங்கவல்லி என வேறுபெயர்களிலும் வழங்கப்படும். நல்லெண்ணெயில் சமைத்த இதன் இலைகளை உணவோடு சேர்த்து இருபத்தொரு நாள் உண்டு வந்தால் சுவாசகாசம் அகலும்; இளைப்பு இருமல் போக்கும். ஞானப்பச்சிலை என வள்ளலார் போற்றும் இவ்விலை குரல்வளத்தை மேம்படுத்தும்; வாழ்நாளை நீட்டிக்கும்.

தாமரை : ஐயா, இது குப்பைமேனிதானே!

மருத்துவர் : ஆமாம். உனக்கு எப்படி இதன் பெயர் தெரியும்?

தாமரை : எங்கள் பாட்டி ஊருக்கு நான் சென்றபோது என்னைப் பூச்சிக் கடித்ததால், கை, கால்களில் தடிப்பு ஏற்பட்டது. அப்போது பாட்டி இந்தச் செடியின்

இலைகளை அரைத்துப் பூசினார்கள். அதனால்தான், இதன்பெயர் எனக்குத் தெரிந்தது.

மருத்துவர் : (சிரித்தவாறு) இதனைத்தான் பாட்டி வைத்தியம் என்பார்கள். குப்பைமேனி, நச்சுக்கடிகளுக்கு நல்ல மருந்தாக விளங்கும் மூலிகைச் செடியாகும். இதன் இலைகளைக் காயவைத்துப் பொடியாக்கிப் பூசினால், படுக்கைப் புண் குணமாகும். குழந்தைகளின் வயதுக்கேற்ற அளவில் உண்ணக் கொடுத்தால் மலப்புழுக்கள் வெளியேறும்; வயிறு தூய்மையாகும்; பசியைத் தூண்டும்; இலைகளுடன் மஞ்சள், உப்புச் சேர்த்து அரைத்துப் பூசினால் சொறி, சிரங்கு நீங்கும். மேனி துலங்க குப்பைமேனி என்பது பழமொழி.

பொற்கொடி : கற்றாழையும் மூலிகையா ?

மருத்துவர் : வறண்டநிலத் தாவரமான கற்றாழையில் பலவகையுண்டு. அவற்றுள் சோற்றுக் கற்றாழையே மருந்தாகப் பயன்படுகிறது. இதன் தோலை நீக்கிச் சோற்றுப் பகுதியைக் குறைந்தது பத்து முறையேனும் கழுவுதல் வேண்டும். அப்போதுதான் அதன் கசப்புத்தன்மை நீங்கும். நூறு கிராம் அளவு கற்றாழையின் சோற்றுப் பகுதியை எடுத்து நூறு மில்லி நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சித் தலைக்குத் தேய்த்துவர முடிவளரும்; இரவில் நல்ல உறக்கம் வரும். மஞ்சள் சேர்த்துக் காயம்பட்ட இடத்தில் பூசினால் காயம் குணமாகும். பசுவின்பாலுடன் சேர்த்துச் சாப்பிட்டால் மூலச்சூடு குறையும். கற்றாழைக்குக் குமரி என்னும் வேறுபெயரும் உண்டு. பெண்களின் கருப்பை சார்ந்த நோய்களை நீக்குவதால் குமரி கண்டநோய்க்குக் குமரி கொடு என்னும் வழக்கு ஏற்பட்டது.

தாமரை : அம்மா ! இதோ பாருங்கள், முருங்கைக்கீரை, கறிவேப்பிலை.

பொற்கொடி : முருங்கை நிறைந்த சத்துள்ளது என்று தெரியும். அஃது எப்படி மருந்தாகும், எந்த நோயை நீக்கும் ? கறிவேப்பிலையும் மூலிகையோ ? வியப்பாக உள்ளதே !

மருத்துவர் : இதுதான் மக்களின் அறியாமை என்பது. எளிதாகக் கிடைப்பதனாலும், வீட்டில் வளர்வதாலும் முருங்கையை மூலிகை என யாரும் எண்ணுவதில்லை. அஃது உணவுப்பொருள் மட்டுமன்று; நல்ல மருந்துப் பொருளும்கூட. முருங்கைப்பட்டையை அரைத்துத் தடவினால் முரிந்த எலும்பு விரைவில் கூடும்; வீக்கத்தைக் குறைக்கும். முருங்கைக்கீரை கண்பார்வையை ஒழுங்குபடுத்தும்; உடலை வலுவாக்கும், இரும்புச்சத்து நிறைந்துள்ளதால் கூந்தலை வளரச் செய்வதில் இதற்குப் பெரும்பங்குஉ உண்டு. கறிவேப்பிலையும் மூலிகையே. மணத்திற்காக மட்டும் உணவில் சேர்க்கப்படும் இலையாக இதனைக் கருதக்கூடாது. ஒரு மண்சட்டியில் முந்நூறு மில்லி அளவு பசுவின்பாலை ஊற்றி வேடு கட்டுதல் வேண்டும். அதன் மீது கறிவேப்பிலையின் காம்பு நீக்கிய கொழுந்து இலைகளைப் போட்டுச் சிறுதீயில் அவித்தல் வேண்டும். அதனை விடக்கடி ஏற்பட்ட இடத்தில் வைத்துக் கட்டினால் மூன்று நாளில் குணமாகும். காலை

மாலை என இருவேளையும் ஐந்து கிராம் கறிவேப்பிலையைக் கழுவிச் சிறிதுசிறிதாக வாயில்போட்டு மென்று விழுங்கினால் சீதபேதி இரண்டு நாளில் குணமாகும். உணவில் சேரும் சிறுநச்சுத்தன்மையை முறிக்கும் தன்மை கறிவேப்பிலைக்கு உண்டு. (வேடு கட்டுதல்– சட்டியின் வாயை மெல்லிய துணியால் மூடிக்கட்டுதல்.)

(பொற்கொடியின் கையில் இருந்த பையைப் பார்த்து)

அடடே! நீங்கள் கரிசலாங்கண்ணிக் கீரையை வாங்கியிருக்கிறீர்களா? நல்லதாகப் போயிற்று.

பொற்கொடி : ஏன் ஐயா, அவ்வாறு கூறுகிறீர்கள்?

மருத்துவர் : கரிசலாங்கண்ணியின் மருத்துவப்பயன் மிகப்பெரிது. இரத்தசோகை, செரிமானக்கோளாறு, மஞ்சள் காமாலை முதலிய நோய்களுக்குக் கரிசலாங்கண்ணி நல்ல மருந்தாகப் பயன்படுகிறது. அது, கண்பார்வையைத் தெளிவாக்கும்; நரையைப் போக்கும். கரிசலாங்கண்ணிக்கு வழங்கப்படும் வேறுபெயர்கள் : கரிசாலை, கையாந்தகரை, பிருங்கராசம், தேகராசம்.

பொற்கொடி : இவை தவிர மருந்துகளாகப் பயன்படும் மூலிகைத்தாவரங்கள் பற்றிக் கூறுங்கள், ஐயா.

மருத்துவர் : மணித்தக்காளிக் கீரை வாய்ப்புண், குடற்புண்ணைக் குணமாக்கும். முசுமுசுக்கைக் கொடியின் வேரினைப் பசுவின்பாலில் ஊறவைத்து, உலர்த்திப் பொடியாக்கிப் பசுவின்பால், மிளகுப்பொடி, சருக்கரையுடன் உண்டுவந்தால் இருமல் நீங்கும். அகத்திக்கீரை, பல் சார்ந்த நோய்களைக் குணமாக்கும். வல்லாரை நினைவாற்றல் பெருக உதவும். வேப்பங் கொழுந்தினைக் காலையில் உண்டு வந்தால் மார்புச்சளி நீங்கும். வேப்பிலையை அரைத்துத்தடவினால் அம்மையால் வந்த வெப்புநோய் அகலும்.

பொற்கொடி : ஐயா, இதுவரை நாங்கள் இயல்பாக எண்ணி வந்த தாவரங்களின் மருத்துவக்குணங்களை அறிந்துகொண்டோம். அவற்றை வாழ்வில் பயன்படுத்தி நலம்பெறுவோம். எங்களுக்குத் தெளிவுபட விளக்கியதற்கு மிக்க நன்றி, ஐயா.

தாமரை : நன்றி ஐயா! சென்று வருகிறோம்.

மருத்துவர் : மெத்த மகிழ்ச்சி, சென்று வாருங்கள்.

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. நோய் நீக்கும் மூலிகைகள் ஐந்தனைக் கூறி, அவற்றின் மருத்துவப்பயன்களை எழுதுக.
2. கீரைகள் மூலிகைகளே என்பதனை விளக்குக.

செயல் திட்டம் : உன் இருப்பிடத்திற்கு அருகிலுள்ள சித்த மருத்துவமனைக்குச் சென்று மூலிகைகள் குறித்தும் அவை அகற்றும் நோய்கள் குறித்தும் தொகுக்க.

பொருள்கோள்

ஒரு செய்யுளில் உள்ள சீர்களையோ அடிகளையோ பொருள் உணர்வுக்கு ஏற்றவகையில் அமைத்துக் கொள்ளும் முறையைப் பொருள்கோள் (பொருள் கொள்ளும் முறை) என வழங்குவர்.

பொருள்கோள் எண்வகைப்படும்.

1. ஆற்றுநீர்ப் பொருள்கோள்
2. மொழிமாற்றுப் பொருள்கோள்
3. நிரல்நிறைப் பொருள்கோள்
4. விற்பூட்டுப் பொருள்கோள்
5. தாப்பிசைப் பொருள்கோள்
6. அளைமறிபாப்புப் பொருள்கோள்
7. கொண்டுகூட்டுப் பொருள்கோள்
8. அடிமறிமாற்றுப் பொருள்கோள்

1. ஆற்றுநீர்ப் பொருள்கோள்

இடையறாது செல்லும் ஆற்றுநீரைப்போலப் பாடலின் சொற்கள் முன்பின் மாறாது நேரே சென்று பொருள்கொள்வது ஆற்றுநீர்ப் பொருள்கோளாகும்.

(எ–டு) பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். – குறள், 6

பொறிவாயில் ஐந்தவித்தான்– மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளின் வழியாகக்கொண்ட ஐவகை ஆசைகளையும்விட்ட இறைவனது; பொய்தீர் ஒழுக்கநெறி நின்றார் – மெய்யான ஒழுக்க நெறியில் நின்றவர்; நீடு வாழ்வார் – வீட்டுலகில் என்றும் இன்புற்று வாழ்வர். இக்குறட்பாவில் பொறிவாயில் எனத் தொடங்கி, நீடுவாழ்வார் என்பது வரையிலுள்ள சொற்கள் முன்பின்னாக மாற்றம் பெறாமல் தொடர்ச்சியாக அமைந்து பொருள்கொள்ளும் வகையில் அமைந்துள்ளன. ஆதலின் இப்பாடல், ஆற்றுநீர்ப் பொருள்கோள் ஆயிற்று.

2. மொழிமாற்றுப் பொருள்கோள்

ஓரடியுள் உள்ள சொற்களை, அவைதரும் பொருளுக்கு ஏற்ப மாற்றிக் கூறுதல் மொழிமாற்றுப் பொருள்கோள் என வழங்கப்படும்.

(எ–டு) சுரையாழ அம்மி மிதப்ப வரையனைய
யானைக்கு நீத்து முயற்கு நிலையென்ப
கானக நாடன் சுனை.

இப்பாடலை அப்படியே படித்தால் பொருள் தெளிவு இருக்காது. இதனைச் சுரை மிதப்ப, அம்மி ஆழ, யானைக்கு நிலை, முயற்கு நீத்து என அந்தந்த அடியிலுள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிப் பொருள்கொள்ளுதல் வேண்டும்.

3. நிரல்நிறைப் பொருள்கோள்

செய்யுளில் இருக்கின்ற சொற்களை முறைமாறாமல், வரிசையாக அமைத்துப் பொருள்கொள்வது நிரல்நிறைப் பொருள்கோள் ஆகும்.

(எ–டு) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. – குறள், 45

இக்குறட்பாவில் அன்பிற்குப் பண்பும், அறத்துக்குப் பயனும் நிரல்நிறையாக வந்து அமைந்துள்ளதால், இப்பாடல் நிரல்நிறைப் பொருள்கோள் ஆயிற்று.

4. விற்பூட்டுப் பொருள்கோள்

வில்லின் இருமுனைகளையும் இணைத்துக் கட்டுதல்போலச் செய்யுளின் முதலில் அமைந்துள்ள சொல்லும், இறுதியில் அமைந்துள்ள சொல்லும் பொருள்படப் பொருத்துவது விற்பூட்டுப் பொருள்கோள். இதனைப் பூட்டுவிற் பொருள்கோள் எனவும் கூறுவர்.

(எ–டு) நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. – குறள், 336

இக்குறளில், உலகு என்னும் இறுதிச்சொல் முதல்சொல்லான நெருநல் என்பதோடு சேர்த்துப் பொருள் கொள்வதனால் இது பூட்டுவில் பொருள்கோள்.

5. தாப்பிசைப் பொருள்கோள்

ஊஞ்சலின் நடுநின்ற கயிறு முன்னும் பின்னும் சென்று வருவதுபோலச் செய்யுளின் நடுவில் அமைந்திருக்கும் சொல், செய்யுளின் முதலிலும் இறுதியிலும் அமைந்திருக்கும் சொற்களுடன் பொருந்திப் பொருளைத் தருவது தாப்பிசைப் பொருள்கோள்.

தாம்பு + இசை = தாப்பிசை – ஊஞ்சல் கயிறு அசைதல்போல.(தாம்பு = ஊஞ்சல்கயிறு)

(எ–டு) இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. – குறள், 310

இப்பாடலில் 'சினத்தை' என்னும் நடுநின்ற சொல்லைச், சினத்தை உடையவர் (இறந்தார்) இறந்தார் அனையர் எனவும், சினத்தைத் துறந்தார் (துறந்தார்) ஞானியர் துணை எனவும் அமைத்துப் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

6. அளைமறிபாப்புப் பொருள்கோள்

பாம்பு, புற்றில் தலைவைத்து நுழையும்போது, தலை மேலாகவும், உடல் அடுத்தும் செல்வதுபோலச் செய்யுளின் இறுதியிலிருந்து சொற்களை எடுத்து முதலில் வைத்துக் கூட்டிப் பொருள் கொள்வது அளைமறிபாப்புப் பொருள்கோள். (அளை – புற்று, பாப்பு – பாம்பு.)

(எ–டு) தாழ்ந்த உணர்வினராய்த் தாளுடைந்து
தண்டூன்றித் தளர்வார் தாமும்
சூழ்ந்த வினையாக்கை சுடவிளிந்து
நாற்கதியிற் சுழல்வார் தாமும்
மூழ்ந்த பிணிநலிய முன்செய்த
வினையென்றே முனிவார் தாமும்
வாழ்ந்த பொழுதினே வானெய்து
நெறிமுன்னி முயலா தாரே.

இப்பாடலில் 'வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரே' என்னும் ஈற்றடியைப் பாடலின் முதலில்கொண்டு பொருள் கொள்ளுதல் வேண்டும்.

7. கொண்டுகூட்டுப் பொருள்கோள்

செய்யுளின் பல அடிகளிலும் கூறப்பட்டுள்ள சொற்களைப் பொருளுக்கு ஏற்பக் கூட்டிப் பொருள்கொள்வது கொண்டுகூட்டுப்பொருள்கோள்.

(எ–டு) கட்டிக் கரும்பு கசக்கும் மிகக்கனிந்த
எட்டிக் கனியினிக்கும் என்னூரில் – பட்டியுள
காளை படிபால் கறக்குமே நல்லபசு
வேளை தவிரா துழும்.

இப்பாடலை அப்படியே படித்தால் பொருள் விளங்காது. இதில் உள்ள சொற்களைக் கட்டிக் கரும்பு இனிக்கும்; மிகக்கனிந்த எட்டிக்கனி கசக்கும்; பட்டியிலிருக்கும் காளை மாடு நேரந்தவிராது உழும். நல்ல பசு படி பால் கறக்கும் எனப் பொருள் கொள்வதற்கு ஏற்ப அடிதோறும் மாறிக்கிடக்கின்ற சொற்களைப் பொருத்தமாக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

குறிப்பு : மொழிமாற்றுப் பொருள்கோள் என்பது அந்தந்த அடிகளில் உள்ள சொற்களை முன்பின்னாக மாற்றிக்கொள்வது. கொண்டுகூட்டுப் பொருள்கோள் என்பது பல அடிகளிலும் உள்ள சொற்களை மாற்றிப் பொருள்கொள்வது.

8. அடிமறிமாற்றுப் பொருள்கோள்

செய்யுளின் எல்லா அடிகளையும் முன்பின்னாக மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது அடிமறிமாற்றுப் பொருள்கோள்.

(எ–டு) மாறாக் காதலர் மலைமறந் தனரே
ஆறாக் கட்பனி வரலா னாவே
வேறா மென்தோள் வளைநெகி ழும்மே
கூறாய் தோழி யான்வாழு மாறே.

இப்பாடலில் உள்ள அடிகளை முன்பின்னாக எப்படி மாற்றிப் பொருள்கொண்டாலும் பொருளும் ஓசையும் சிதையாது.

பயிற்சி :

முறைமாறியுள்ள சொற்களை முறைப்படுத்தித் தொடராக அமைக்க.

அ) இன்று காரணமாக மழை பள்ளிக்கு விடுமுறை.

ஆ) வயிற்றுக்கு ஏழைகளின் உணவு பாவிகள் அளிக்காதவர்கள்.

இ) மீன் நிலத்தில் ஓடும்; மான் நீரில் நீந்தும்.

ஈ) காண்பதற்குச் செவியும் கேட்பதற்குக் காலும் கண்ணும் கொடுத்தான் நடப்பதற்கு இறைவன்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. பொருள்கோள் ______________ வகைப்படும்.
2. ஊஞ்சல் கயிறுபோல முன்பின்னாகப் பொருள்கொள்வது ______________ பொருள்கோள்.
3. பொருளுக்கேற்பச் சொற்களைக் கூட்டிப் பொருள்கொள்வது ________________.
4. செய்யுள் அடிகளை முன்பின்னாக மாற்றினாலும் பொருளும் ஓசையும் சிதையாமல் வருவது ________________.

ஆ) குறுவினாக்கள்

1. பொருள்கோள் என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?
2. ஆற்றுநீர்ப் பொருள்கோளுக்குச் சான்றுதந்து விளக்குக.
3. மொழிமாற்றுப்பொருள்கோளுக்கும் கொண்டுகூட்டுப்பொருள்கோளுக்கும் உள்ள வேறுபாடு யாது?
4. மொழிமாற்றுப் பொருள்கோளுக்குச் சான்றுதந்து விளக்குக.
5. கொண்டுகூட்டுப் பொருள்கோளை விளக்குக.
6. அடிமறிமாற்றுப் பொருள்கோளுக்குச் சான்று தந்து விளக்குக.
7. விற்பூட்டுப் பொருள்கோளை விளக்குக.
8. தாப்பிசைப் பொருள்கோள் என்பது யாது?

வகுப்பறைத்திறன்கள்

கலந்துரையாடல் திறன்

பல்வேறு மருத்துவமுறைகள் குறித்து வகுப்பில் கலந்துரையாடுக.

படைப்பாற்றல் திறன்

கீழ்க்காணும் பாடலை நிறைவு செய்க.

பாட்டுக்கு அழகு பொருள்
பகலுக்கு அழகு வெளிச்சம்
வீதிக்கு அழகு ____________
நீதிக்கு அழகு ____________
வீட்டுக்கு அழகு ____________
காட்டுக்கு அழகு ____________

பின்வரும் பாடலில் மாறியுள்ள வரிகளைப் பொருளுக்கேற்ப வரிசைப்படுத்துக.

மாறியுள்ள பாடல்	பொருளுக்கேற்ப வரிசைப்படுத்திய பாடல்
1. சின்ன வாளி எடுத்தான்	______
சின்னத் தம்பி கண்ணன்	______
புதிய மகிழ்வு கொண்டான்	______
செடிக்கு நீரும் விடுத்தான்	______
பூவின் அழகைக் கண்டான்	______
செடியை நோக்கிச் சென்றான்	______
2. வீட்டில் இருக்கக் கூடாதா	______
அங்கும் இங்கும் ஓடுகிறோம்	______
தினமும் பந்து ஆடுகிறோம்	______
வெப்பம் மிகுந்து போனதால்	______
தெப்பக் குளத்தில் நீரில்லை	______
வெயிலே நீயும் சிலநாள்	______

மொழித்திறன் பயிற்சி

பின்வரும் சொற்களைத் தனித்தனியே பயன்படுத்திச் சொற்றொடரைப் பெரிதாக்குக.

குதிரை ஓடும். (விலங்கு, மிகவும், விரைவாக)

குதிரை ஓடும்.

குதிரை விரைவாக ஓடும்.

குதிரை மிகவும் விரைவாக ஓடும்.

குதிரை மிகவும் விரைவாக ஓடும் விலங்கு.

பயிற்சி : குறிப்புச்சொற்களைத் தனித்தனியே பயன்படுத்திச் சொற்றொடரைப் பெரிதாக்குக.

நான் சென்றேன்.

(காலை, நேற்று, மதுரைக்கு, மீண்டும், சென்னையிலிருந்து, விமானத்தில்)

______

______

______

______

தமிழெண்களைக் கூட்டுக.

௧௦ + ௧௫ =

௨௩ + ௫௦ =

௭௨ + ௨௮ =

௯௦ + ௭ =

௧௦ + ௪௪ =

கட்டுரைப் பயிற்சி : மூலிகை மருத்துவம்.

கடிதப் பயிற்சி : பாராட்டு மடல் (ஓய்வு பெற்ற ஆசிரியருக்கு).

கையெழுத்து இதழ் உடல்நலச் சிறப்பிதழ்		
உடல் நலம் போற்றுவோம்! உள நலம் உயர்த்துவோம்!		நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்!
உணவும் சத்தும் உணவுப்பொருள்கள்	துணுக்குகள் பாட்டி மருத்துவம்	ஓவியம் முதலுதவி தீ விபத்துக்கால உதவி / நீரில் மூழ்கியவரைக் காப்பாற்றுதல்
கவிதை குடிநீர்	சிறுகதை வரும் முன் காப்போம்!	நாடகம் எய்ட்ஸ் விழிப்புணர்வு
கட்டுரை உலக நல அமைப்பு	பழமொழிகள் உடல் நலம்	மூலிகைகள் வீட்டில் வளர்க்க வேண்டிய மூலிகைகள்
இத்திங்களுக்குரிய தமிழ்மன்ற நிகழ்ச்சிகள்		

பொருள் வைப்புமுறை அறிக

குழந்தை அரும்புவுக்கு அகவை மூன்று; அவள் விளையாடிக் கொண்டிருந்தாள். விளையாட்டுப் பொருள்கள் இருந்த அலமாரியில் பந்தை எடுக்கச் சென்றாள். அருகிலிருந்த மாத்திரை அவள் கண்ணில்பட்டது. ஏதோ தின்பண்டம் என நினைத்து அதனை எடுத்துத் தின்று விட்டாள்; சிறிது நேரத்தில் மயங்கி விழுந்தாள். குழந்தையின் கைக்கெட்டுமாறு மாத்திரைகளை வைக்கலாமா? வேறென்னென்ன பொருள்களைக் குழந்தையின் கைக்கு எட்டுமாறு வைக்கக்கூடாது?

பாடி மகிழ்க.

பாட்டி மருந்து

வீட்டுக்குள்ளே எல்லாம் இருக்கு
வீதியில் மருந்து கண்டது கிடக்கு!
பாட்டியைக் கேட்டால் தருவாள் நமக்கு
பக்குவ மாக அம்மியில் அரைத்து!
சுக்கு மிளகு சீரகம் இஞ்சி
சுத்தமான திப்பிலி சேர்த்து
கைக்குள் வைத்தும் கசக்கிக் கொடுப்பாள்
கண்போல் நம்மைக் காத்தும் கிடப்பாள்!

வாழ்க்கைத்திறன்

மனவெழுச்சிகளை எதிர்கொள்ளுதல்

அல்லிக்கு வைத்த பொருள் வைத்த இடத்தில் இருத்தல் வேண்டும். வீட்டிற்கு வருவோர் யாராவது சமையலறையிலோ வரவேற்பறையிலோ இருக்கும் பொருள்களை எடுத்தால், எடுத்த இடத்தில் வைத்தல் வேண்டும். இல்லாவிட்டால் சினங்கொண்டு கத்துவாள். சிறு வயதிலிருந்தே அவள் அப்படித்தான் என்பது அவள் வீட்டாருக்குத் தெரியும். ஆனால், அவள் வீட்டிற்கு வந்த அண்ணனின் மகள் வீட்டிலிருந்த பொருள்களையெல்லாம் கலைத்துவிட்டதைக் கண்டு பொங்கி எழுந்தாள்; சினத்தில் குழந்தையை அடித்துவிட்டாள். குழந்தையின் அழுகையைக் கேட்ட அனைவரும் அல்லியின்மீது குறைபட்டுக்கொண்டனர். அவளால், அவளின் இயல்பை மாற்றிக்கொள்ள இயலவில்லை.

1. அல்லி, தன் மன எழுச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் குழந்தையை அடித்தது முறையா?
2. சினங்கொண்டு உங்களை யாராவது அடித்ததுண்டா? அப்போது உங்கள் மனநிலை எவ்வாறிருந்தது?
3. உங்களுக்குச் சினம் வந்து நீங்கள் யாரையாவது அடித்தபிறகு ஏன் அடித்தோம் எனச் சிந்தித்தது உண்டா?

மதிப்புக்கல்வி

சிக்கனம்

அமெரிக்காவின் புகழ்பெற்ற பணக்காரர்களுள் ஒருவர் அவர். ஒருசமயம் அவரிடம் நன்கொடை பெறுவதற்காகக் கல்லூரி மாணவர்கள் சென்றார்கள். மிகச்சிறிய விளக்கின் ஒளியில் படித்துக் கொண்டிருந்த அவர், விளக்கை அணைத்துவிட்டு அவர்களிடம் பேசத் தொடங்கினார். இவர் என்ன இப்படி ஒரு கஞ்சனாக இருக்கிறாரே! இவர் எங்கே நமக்கு நன்கொடை தரப்போகிறார் என்று மாணவர்கள் நினைத்தார்கள். ஆனால், அவர்கள் வியப்படையும் அளவிற்குக் கல்லூரியில் வகுப்பறை கட்டுவதற்காக மூன்று இலட்ச ரூபாய் கொடுத்து உதவினார். அவரைப் பற்றித் தவறாக நினைத்துக் கொண்டிருந்த மாணவர்கள், “ஐயா, எங்களுடன் பேசும்போது நீங்கள் விளக்கை அணைக்கக் காரணம் என்ன?” என்று கேட்டார்கள். அதற்கு அவர், படிப்பதற்குத்தான் விளக்குத் தேவை. உங்களுடன் பேசுவதற்குத் தேவை யில்லை. சில காசுகள்தானே என்று அற்பமாக நினைக்கக் கூடாது. சிறு துளிதான் பெருவெள்ளம் ஆகிறது. சிக்கனமாக நான் இருப்பதனைப்பார்த்துவிட்டு,

அதனை நீங்கள் கஞ்சத்தனம் என்று நினைக்கக் கூடாது. நான் சிக்கனத்தைக் கடைப் பிடிப்பதால்தான், இந்தத் தொகையை உங்களுக்கு நன்கொடை யாகத் தரமுடிந்தது; சிக்கனம் என்பது வேறு, கஞ்சத்தனம் என்பது வேறு என்றார்.

1. நீ எவ்வளவு சேமித்து வைத்துள்ளாய் ?
2. சேமித்து வைக்காமைக்குக் காரணம் என்ன ?
3. சேமிப்பதற்கான வழிமுறைகள் யாவை ?

மொழியாக்கம் செய்க.

Only a lazy man is sinner. Why is it so? The minds of those who are idle entertain bad ideas. There is a proverb in English that the mind of a lazy man is the devil's workshop. There is no greater sin than laziness and inactivity. Everyone should avoid these at any cost. The only way to avoid these is to engage oneself in good deeds, service to parents, help to brothers and sisters. Co-operation with friends, respect and service to teachers and deeds in which men should engage their mental faculties.

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. The wise and the fool have their follows.
   இனம் இனத்தோடு சேரும்.
2. He who has an art has everywhere a part.
   கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.
3. Being on the sea, sail being on the land, settled.
   காலத்திற்கேற்ற கோலம் கொள்.
4. No rains no grains.
   மாரியல்லது காரியம் இல்லை.
5. Bad words find bad acceptance.
   நுணலும் தன் வாயாற் கெடும்.

திருக்குறள்

சான்றாண்மை

(பண்புகளால் நிறைந்து நிற்றல்)

1. கடன்என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

பொருள் : நல்ல குணங்களால் நிறைந்து வாழும் சான்றோர்கள் நல்லவற்றையெல்லாம் தம் கடமையென மேற்கொண்டு வாழ்வர்.

சொற்பொருள் : கடன் – கடமை.

இலக்கணக்குறிப்பு : என்ப – பலர்பால் வினைமுற்று; மேற்கொள்பவர் – வினையாலணையும் பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம் : அறிந்து – அறி + த் (ந்) + த் + உ. அறி – பகுதி; த் – சந்தி; த் – ந் ஆனது விகாரம்; த் – இறந்தகால இடைநிலை; உ – வினையெச்ச விகுதி.

2. குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத் துள்ளதூஉ மன்று.

பொருள் : நற்குணங்களால் சிறந்திருத்தலே சான்றோரின் பெருமை. அதனை விடுத்த பிற நலன்கள் எவ்வகையிலும் பெருமை சேர்க்காது.

சொற்பொருள் : சான்றோர் – நல்ல குணங்கள் நிறைந்தவர்.

இலக்கணக்குறிப்பு : உள்ளதூஉம் – இன்னிசையளபெடை; அன்று – குறிப்புவினைமுற்று.

3. அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால்(பு) ஊன்றிய தூண். *

பொருள் : அன்புடைமை, நாணம், பிறர்க்கு உதவுதல், உயிர்களிடத்து இரக்கம், உண்மை பேசுதல் ஆகிய ஐந்தும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள்.

சொற்பொருள் : நாண் – நாணம்; ஒப்புரவு – உதவுதல்; கண்ணோட்டம் – உயிர்களிடத்து இரக்கம்; வாய்மை – உண்மை.

இலக்கணக்குறிப்பு : கண்ணோட்டம் – தொழிற்பெயர்.

அணி : ஏகதேச உருவக அணி

4. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு. *

பொருள் : தவமென்பது பிற உயிர்களைக் கொல்லாமையே; சால்பு என்பது பிறர் குறைகளைச் சொல்லாமையே.

சொற்பொருள்: சால்பு – சான்றாண்மை.

இலக்கணக்குறிப்பு : கொல்லா நலத்தது, சொல்லா நலத்தது – ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம்.

அணி : எடுத்துக்காட்டு உவமை அணி.

(இந்நான்கு குறட்பாவும் சான்றாண்மையின் இலக்கணத்தைக் கூறுகின்றன.)

5. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. *

பொருள் : ஒரு செயலைச் செய்பவர்க்கு வலிமை தருவது பணிவுடன் நடத்தலே. அதுவே சான்றோர்க்குத் தம் பகைவரைப் பகைமையிலிருந்து மாற்றி நட்பாக்குவதற்கு ஏற்ற கருவி.

சொற்பொருள் : ஆற்றுவார் – செயல் செய்பவர்; ஆற்றல் – வலிமை; மாற்றார் – பகைவர்.

இலக்கணக்குறிப்பு : பணிதல் – தொழிற்பெயர்; ஆற்றுவார், மாற்றார் – வினையாலணையும் பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம் : ஆற்றுவார் – ஆற்று + வ் + ஆர். ஆற்று – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி. பணிதல் – பணி + தல். பணி – பகுதி; தல் – தொழிற்பெயர் விகுதி.

6. சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்.

பொருள் : தம்மைவிட ஆற்றல் குறைந்தவரிடத்து ஏற்பட்ட தோல்வியையும் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். அப்பண்பே ஒருவரின் சான்றாண்மையை அளந்தறிவதற்கான உரைகல் ஆகும்.

சொற்பொருள் : துலையல்லார் – ஆற்றலில் குறைந்தவர்; கட்டளை – உரைகல்.

7. இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. *

பொருள் : தீங்கு இழைத்தவர்க்கும் நன்மையே செய்தல் வேண்டும். அவ்வாறு செய்யாமற் போனால் சால்பென்னும் தகுதியால் எப்பயனும் இல்லை.

சொற்பொருள் : இன்னா – தீங்கு; இனிய – நன்மை; செய்யாக்கால் – செய்யாவிடத்து.

(இம்மூன்று குறட்பாவும் சால்பின் பயனைக் கூறுகின்றன.)

8. இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.

பொருள் : சால்பென்னும் மனஉறுதி உண்டாகப் பெறுமானால் ஒருவனுக்குப் பொருள் இல்லாததால் ஏற்படும் வறுமை ஒரு குறையாகாது.

சொற்பொருள் : இன்மை – வறுமை; இளிவன்று – இழிவானதன்று; திண்மை – வலிமை.

இலக்கணக்குறிப்பு : இன்மை, திண்மை – பண்புப் பெயர்கள்.

பிரித்தறிதல் : ஒருவற்கு – ஒருவன் + கு; இளிவன்று – இளிவு + அன்று; சால்பென்னும் – சால்பு + என்னும்.

9. ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார். *

பொருள் : சான்றாண்மை என்னும் பண்பிற்குக் கடலென்று புகழப்படுபவர் உலகமே அழியும் ஊழிக்காலம் வந்தாலும் தம் நிலையில் வேறுபடாமல் இருப்பர்.

சொற்பொருள் : ஊழி – உலகம்., ஆழி – கடல்.

(இவ்விரு குறட்பாவும் சான்றாண்மையின் சிறப்பைக் கூறுகின்றன.)

10. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.

பொருள் : சான்றோர்களின் சான்றாண்மைக் குணத்தில் குறைவு ஏற்படுமானால், இவ்வுலகமும் பொறுமை என்னும் தன்பாரத்தைத் தாங்காது.

சொற்பொருள் : இருநிலம் – பெரிய நிலம்; பொறை – சுமை.

இலக்கணக்குறிப்பு : சான்றவர் – வினையாலணையும் பெயர்; இருநிலம் – உரிச்சொற்றொடர்; மன், ஒ – அசைச்சொற்கள்.

(இக்குறள் சான்றாண்மை குறைந்தால் ஏற்படும் இழிவினைக் கூறுகிறது.).

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. நற்குணங்களால் சிறந்திருத்தல் ____________ பெருமையாகும்.
2. தவம் என்பது ____________.
3. தோல்வியை ஒப்புக்கொள்வதே சான்றாண்மையை அளந்தறியும் ____________ .

4. மாற்றார் என்னும் சொல்லின் பொருள் ______________ .

5. தீங்கிழைத்தவர்க்கும் ______________செய்யவேண்டும் .

2. பொருத்துக.

இன்மை – வலிமை

திண்மை – வறுமை

ஆழி – தவம்

நோன்மை – கடல்

ஆ) குறுவினாக்கள்

1. சான்றோர் எதனைத் தம் கடமையாகக் கொள்வர் ?
2. சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள் யாவை ?
3. சான்றாண்மையை அறிய உதவும் உரைகல் எது ?
4. வறுமை ஒரு குறையாகாது, எப்போது ?

இ) சிறுவினாக்கள்

1. சான்றாண்மையின் இலக்கணம் யாது ?
2. சான்றாண்மையின் பயன்களை விளக்குக.
3. சான்றாண்மையின் சிறப்புகளை எழுதுக.

ஈ) நெடுவினா

சான்றாண்மை குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

உ) எதுகை, மோனைச்சொற்களை எடுத்தெழுதுக.

1. ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
   மாற்றாரை மாற்றும் படை.

2. சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
   தாங்காது மன்னோ பொறை.

ஊ) மாறியுள்ள சீர்களை முறைப்படுத்தி எழுதுக.

நோன்மை நலத்தது சால்பு சொல்லா
கொல்லா பிறர்தீமை நலத்தது.

இன்பம்

பழந்தமிழ் கற்றல் இன்பம்
பலநாடு சுற்றல் இன்பம்
எழுந்திடு புதுமை தன்னை
ஏற்றிடல் வாழ்வுக் கின்பம்
குழந்தையின் தளிர்க்கை பட்ட
கூழினை உண்ப தின்பம்
இழந்ததைப் பெறுதல் இன்பம்
இசைபட வாழ்தல் இன்பம்!
* கற்றவர் முன்தாம் கற்ற
கல்வியைக் கூறல் இன்பம்
வெற்றியை வாழ்வில் சேர்க்கும்
வினைபல புரிதல் இன்பம்
சிற்றினக் கயவ ரோடு
சேராது வாழ்தல் இன்பம்
பெற்றதை வழங்கி வாழும்
பெருங்குணம் பெறுதல் இன்பம்! *

– சுரதா

பொருள் : பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்பது மகிழ்ச்சி தரும். பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்வது மனத்திற்கு மகிழ்ச்சி தரும். காலந்தோறும் மாறிவரும் தேவையான புதுமைகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் பெறுதல் வாழ்விற்கு மகிழ்ச்சி தரும்.

குழந்தை, தன் பிஞ்சுக்கையால் கூழ்போலப் பிசைந்த உணவை ஒருவன் உண்ணும் போதும், தான் இழந்த பொருளை மீண்டும் அடையும்போதும், பிறர் தன்னைப் புகழுமாறு வாழும்போதும் மகிழ்ச்சி ஏற்படும். கற்றோர் அவையில், தான் கற்ற கல்வியை எடுத்துரைப்பதும் வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கான செயல்களில் ஈடுபடுவதும் மகிழ்ச்சி தரும்.

கீழ்க்குணம் உடைய தீயோரின் நட்பை விலக்கி வாழ்தலும், தாம் பெற்ற செல்வத்தைப் பிறருக்கு வழங்கும் சிறந்த குணம் பெறுதலும் வாழ்விற்கு மகிழ்ச்சி தரும்.

சொற்பொருள் : இசைபட – புகழுடன்; கயவர் – கீழ்க்குணமுடையோர்.

இலக்கணக்குறிப்பு : தளிர்க்கை – உவமைத்தொகை; பழந்தமிழ், சிற்றினம், பெருங்குணம் – பண்புத்தொகைகள்; வழங்கி – வினையெச்சம்; கற்றல், பெறுதல், வாழ்தல் – தொழிற்பெயர்கள்.

ஆசிரியர் குறிப்பு : உவமைக் கவிஞர் சுரதாவின் இயற்பெயர் இராசகோபாலன். இவர் திருவாரூர் மாவட்டத்திலுள்ள பழையனூரில் 23.11.1921அன்று பிறந்தார். பெற்றோர் திருவேங்கடம் – செண்பகம் ஆவர்.

பாவேந்தர் பாரதிதாசன்மீது கொண்ட பற்றுக் காரணமாகத் தம் பெயரைச் சுப்புரத்தினதாசன் என மாற்றிக்கொண்டார். அதன் சுருக்கமே சுரதா ஆயிற்று.

தேன்மழை, துறைமுகம், சுவரும் சுண்ணாம்பும், சுரதாவின் கவிதைகள் முதலான கவிதை நூல்களை இயற்றியுள்ளார்.

தேன்மழை என்னும் கவிதை நூல், தமிழகஅரசின் தமிழ் வளர்ச்சித் துறை வழங்கும் சிறந்த நூலுக்கான பரிசைப் பெற்றுள்ளது. தமிழக இயலிசை நாடக மன்றத்தின் கலைமாமணிப் பட்டத்தையும், தமிழகஅரசின் பாவேந்தர் விருதையும் இவர் பெற்றுள்ளார்.

நூற்குறிப்பு : தேன்மழை நூலில் இயற்கையெழில் முதலாக ஆராய்ச்சி ஈறாகப் பதினாறு பகுதிகளாகக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள், தேன் துளிகள் என்னும் பகுதியில் இப்பாடல் இடம்பெற்றுள்ளது.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. குழந்தையின் தளிர்க்கை பட்ட ________ உண்பது இன்பம்.
2. கற்றவர் முன்தாம் கற்ற ________ இன்பம்.
3. வெற்றியை வாழ்வில் சேர்க்கும் ________ இன்பம்.
4. ________ சேராது வாழ்தல் இன்பம்.

ஆ) குறுவினாக்கள்

1. எதனைக் கற்றல் இன்பம்?
2. வாழ்வுக்கு இன்பம் தருவது எது?
3. எவ்வாறு வாழ்தல் இன்பம் தரும்?
4. எத்தகு வினைபுரிதல் வேண்டும்?
5. கல்வியைக் கூறல் இன்பம்தரும் எப்போது?
6. பெருங்குணம் எது?

இ) நெடுவினா

இன்பம் தருவனவாக உவமைக்கவிஞர் கூறுவன யாவை?



பெருந்தலைவர் காமராசர்

தன்னலமற்ற தலைவர்; கர்மவீரர்; கல்விக்கண் திறந்த முதல்வர்; ஏழைப்பங்காளர் என்னும் புகழுரைகளுக்கெல்லாம் உரியவர் காமராசர். இவர், விருதுநகரில் குமாரசாமி, சிவகாமி இணையர்க்கு மகனாய் 1903ஆம் ஆண்டு சூலைத் திங்கள் பதினைந்தாம் நாளன்று தோன்றினார்.

இளமைப்பருவம்

நாட்டாண்மைக்காரராக இருந்த காமராசரின் தாத்தா, பலசமயங்களில் பஞ்சாயத்துக் கூட்டங்களுக்குத் தன்பெயரன் காமராசரையும் அழைத்துச் செல்வார். காமராசர் ஓர் ஓரமாக உட்கார்ந்தபடி தாத்தா கூறும் தீர்ப்புகளைக் கவனித்து வருவதனைக் கண்ட பலரும் காமராசரின் பண்பைப் பாராட்டினர். காமராசர், திண்ணைப் பள்ளியில் தமிழ் எழுத்துகளைக் கற்று, அதன்பிறகு ஓர் ஆண்டு தமிழ்ப்பாடம் கற்றார்.

காமராசர் அதன்பின்பு, கல்வியோடு உணவளிக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று கல்வி கற்றார். காமராசர் தனது ஏழுவயதில் சுவரொட்டியில் வந்தேமாதரம் என்று எழுதப்பட்டிருப்பதனைக் கண்டார். அந்த வார்த்தை அவரது மனத்தில் ஆழமாகப் பதிந்துவிட்டது. விடுதலைப் போராட்ட உணர்வும் அவரது உள்ளத்தில் மெல்லமெல்லச் சுடர்விட்டுக் கொண்டிருந்தது. அவருக்குப் பன்னிரண்டு வயதிலேயே பள்ளிக்குச் செல்லவியலா நிலை ஏற்பட்டது.

அரசியலில் ஈடுபாடு

காமராசர், பள்ளி செல்ல இயலாதபோதும் நாள்தோறும் செய்தித்தாள்களைப் படித்தும், அரசியல் கூட்டங்களில் தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்டும், தம்முடைய அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டார்; மெய்கண்டான் புத்தகச்சாலை என்ற

நூல்நிலையத்திற்குச் சென்று இலெனின், கரிபால்டி, நெப்போலியன் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளைப் படித்துத் திறமையாகப் பேசவும் வாதம் செய்யவும் தொடங்கினார்.

அவர், இளமையில் தேசிய இயக்கமான காங்கிரசில் சேர்ந்து, அதன் தொண்டராகத் தம் அரசியல் வாழ்வினைத் தொடங்கினார்; கட்சிக் கூட்டங்களை நடத்தினார்; ஊர்வலங்களில் கலந்து கொண்டார்; கொடி பிடித்தார்; சைமன் குழு எதிர்ப்பு, உப்புச் சத்தியாகிரகம், வெள்ளையனே வெளியேறு ஆகிய போராட்டங்களில் பங்குகொண்டார்; சிறை சென்றார். பதினோராண்டுகள் சிறையில் கழித்தார். அவரது தன்னலமற்ற உழைப்பைக்கண்ட தலைவர் சத்தியமூர்த்தி, காமராசரைக் கட்சியின் செயலாளராக நியமித்தார். சத்தியமூர்த்தியைக் காமராசர், தம் அரசியல் குருவாக ஏற்றுக்கொண்டார். இவர், 1937இல் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தலைவர்களை உருவாக்குபவர்

1939ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக் காங்கிரசுக் கட்சியின் தலைவராகக் காமராசர் தேர்ந்தெடுக்கப் பட்டார். பன்னிரண்டு ஆண்டுகள் அப்பதவியில் இருந்தார்; செல்வாக்குமிக்க தலைவராகத் திகழ்ந்தார்.

1945இல் பிரகாசம், 1947இல் ஓமந்தூர் இராமசாமி மற்றும் 1949இல் குமாரசாமி ஆகியோர் முதலமைச்சராகப் பதவியேற்பதற்குக் காமராசர் காரணமாக இருந்தார். நேருவின் மறைவுக்குப்பின் லால் பகதூர் சாஸ்திரியையும், லால் பகதூர் சாஸ்திரியின் மறைவுக்குப்பின் இந்திரா காந்தியையும் முதன்மையமைச்சராக ஆக்கியதில் இவர் பெரும்பங்காற்றினார். அதனால், **தலைவர்களை உருவாக்குபவர்** என இவர் அழைக்கப்பட்டார்.

முதலமைச்சர் காமராசர்

1954 இல் இராஜாஜி முதலமைச்சர் பதவியிலிருந்து விலகியதும் காமராசர் அப்பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1963இல் தாமாகப் பதவி விலகும்வரை அப்பதவியில் திறம்படச் செயல்பட்டார். அவரது அமைச்சரவை சிறியதாக இருந்தபோதிலும் செயல்திறன் மிக்கதாக விளங்கியது. அதனால், மக்கள் நலன்பயக்கும் நல்ல பல திட்டங்களைச் செயல்படுத்த முடிந்தது. காமராசர் ஆட்சிக் காலத்தில் முன்னாள் குடியரசுத் தலைவர் ஆர். வெங்கட்ராமன் தொழிலமைச்சராகவும், சி. சுப்பிரமணியம் கல்வியமைச்சராகவும் இருந்து அவருக்கு உறுதுணையாகப் பணியாற்றினர்.

தொழில் முன்னேற்றம்

காமராசர் முதலமைச்சராக இருந்த காலத்தில் இரண்டாவது, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அப்போது, தமிழகத்தில் பல பொருளியல் தொழில்துறைத் திட்டங்கள் தொடங்கப்பட்டன; மின் திட்டங்கள் மிகுந்தன; சாலைகள் போடப்பட்டன; **கிண்டி, அம்பத்தூர், இராணிப்பேட்டை** முதலிய இடங்களில் பெரிய தொழிற்பேட்டைகளும் மாவட்டந்தோறும் சிறிய தொழிற்பேட்டைகளும் அமைக்கப்பெற்றன; வேளாண்மைக்கெனப் பாசனவசதிகள் செய்யப்பட்டன; அணைகள் கட்டப்பட்டன. இவர் காலத்தில் **கூட்டுறவு இயக்கம்** வேரூன்றியது; அதனால், தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் இல்லாத சிற்றூர்களே இல்லை என்னும் நிலை உருவானது. இவர், நெசவுத்தொழில் வளர்ச்சிக்காகப் பல திட்டங்களைத் தீட்டினார்.

நெய்வேலி, நிலக்கரிச் சுரங்கத் தொழிற்சாலை, இந்துஸ்தான் போட்டோ பிலிம் தொழிற்சாலை, கிண்டி அறுவைசிகிச்சைக் கருவித் தொழிற்சாலை, சருக்கரை ஆலை, சோடா உப்புத் தொழிற்சாலை, சிமெண்ட் தொழிற்சாலை, பெரம்பூர்த் தொடர்வண்டிப் பெட்டித் தொழிற்சாலை,_ மேட்டூர்க் காகிதத் தொழிற்சாலை முதலியன இவரது ஆட்சியில் தொடங்கப்பெற்றன.

கல்விப் புரட்சி

காமராசர் காலத்தில் கட்டாயக் கல்வி நடைமுறைப் படுத்தப்பட்டது. **தெருதோறும் தொடக்கப்பள்ளி, ஊர் தோறும் உயர்நிலைப் பள்ளி** என்பதே அவரது நோக்கமாக அமைந்தது. பள்ளி வேலைநாள்களை நூற்றெண்பதி லிருந்து இருநூறாக உயர்த்தினார் காமராசர். தொடக்கப் பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் இவரால் தொடங்கப்பட்டது. பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தப்பட்டுப் பள்ளிகளுக்கான அடிப்படைப்பொருள்களும் கருவிகளும் பெறப்பட்டன.

இவர், ஈராண்டுகளில் நூற்று முப்பத்து மூன்று மாநாடுகள் கூட்டினார். இவ்வாறு கூட்டப்பட்ட மாநாடுகள் மூலம் பல கோடி ரூபாய் மதிப்புள்ள நன்கொடைகள் கிடைத்தன; உயர்நிலைப் பள்ளிவரை இலவசக் கல்வி கொண்டு வரப்பட்டது.

இவரால், ஒவ்வொரு மாவட்டத்திலும் தொழில் நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. மேலும், உடற்பயிற்சிக் கல்லூரிகளும் ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகளும் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் திறக்கப்பட்டன. மருத்துவக் கல்லூரி முதலான தொழிற்கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடனளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

சமூக முன்னேற்றத் திட்டங்கள்

சமுதாய அமைப்பின் அடித்தளத்தில் உள்ளவர்களைக் கைதூக்கிவிட, இவர் முற்போக்கு நடவடிக்கைகள் பல எடுத்தார். தஞ்சாவூர்ப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்திச் சாகுபடி செய்யும் தொழிலாளிக்கு அறுபது விழுக்காடு பங்கு கிடைக்க வழிவகை செய்தார். நிலச்சீர்திருத்தம் இவரால் கொண்டுவரப்பட்டது; நில உச்சவரம்பு முப்பது ஏக்கர் எனக் குறைக்கப்பட்டது. நிலமுதலாளிகளிடமிருந்து உபரிநிலங்கள் பெறப்பட்டு நிலமில்லாதோருக்கு அவை பிரித்தளிக்கப்பட்டன.

மீனவர், கருப்புக்கட்டி காய்ச்சுபவர், கைத்தறியாளர், குயவர் முதலிய சிறுதொழிலாளர் நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. மக்கள் நலத்திட்டங்களில் ஓய்வூதியம் குறிப்பிடத்தக்கது. நகர்ப்புற வீடுகட்டும் திட்டம், இலவச மருத்துவவசதி முதலியனவும் இவரால் அமைத்துக் கொடுக்கப்பட்டன.

காமராசர் திட்டம்

1962ஆம் ஆண்டு சீனப் படையெடுப்புக்குப் பின், காங்கிரசுக் கட்சியின் செல்வாக்குச் சரியத் தொடங்கியது. இடைத்தேர்தல்கள் சிலவற்றில் காங்கிரசுக் கட்சி தோல்வியடைந்தது. எனவே, கட்சியை வலுப்படுத்த மூத்த தலைவர்கள் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப்பணியில் ஈடுபடவேண்டும் எனக் காமராசர் வலியுறுத்தினார்; முதலில் தாமே முதலமைச்சர் பதவியைவிட்டு விலகிக் கட்சிப்பணிக்குத் திரும்பினார். மொரார்ஜி தேசாய், லால்பகதூர் சாஸ்திரி முதலியோரும் அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கட்சிப் பணிகளில் ஈடுபட்டனர். அத்திட்டத்தைக் காமராசர் திட்டம் என அழைத்தனர்.

அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர்

புவனேசுவர் நகரில் 1963ஆம் ஆண்டில் கூடிய காங்கிரசு மாநாட்டில் காமராசர் அகில இந்தியக் காங்கிரசுத் தலைவராகப் பதவியேற்றார். அப்பொழுது நாடெங்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு கட்சிப்பூசல்களைப் போக்கி, மக்களிடம் நேரடித் தொடர்புகொண்டார். இரஷ்யாவிற்கும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று அந்நாட்டுத் தொழில் முன்னேற்றங்களை நேரில் கண்டார். அவற்றை நம் நாட்டிலும் செயல்படுத்த முனைந்தார். இந்தியப் பிரதமர் நேரு 1964ஆம் ஆண்டில் காலமானார். புதிய பிரதமரைத் தேர்ந்தெடுக்கும் சிக்கல் எழுந்தது. அப்பதவிக்குக் காங்கிரசுக் கட்சியினுள் போட்டி ஏற்படும் சூழ்நிலை தோன்றியது. போட்டி ஏற்பட்டால் கட்சியில் பிளவு ஏற்படலாம் என்ற அச்சமும் நிலவியது. இவ்வேளையில் காமராசர் நாடாளுமன்றக் காங்கிரசுக் கட்சி உறுப்பினர்களின் கருத்தைத் தனித்தனியே கேட்டறிந்து, லால்பகதூர் சாஸ்திரியைப் போட்டியின்றிப் பிரதமராகத் தேர்ந்தெடுக்க வழிவகை செய்தார்.

சாஸ்திரி எதிர்பாராதமுறையில் 1966ஆம் ஆண்டு தாஸ்கண்டில் உயிரிழந்தார். மீண்டும் பிரதமரைத் தெரிவுசெய்வதில் சிக்கல் எழுந்தது. இவ்வமயம் காமராசர், நேருவின் மகள் இந்திராகாந்தி பிரதமர் பதவிக்குப் பொருத்தமானவர் எனக் கருதி, அவருக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கினார். அதனாலேயே இந்திராகாந்தி பிரதமரானார். இவ்வாறு, தம் தலைமையையும் செல்வாக்கையும் பயன்படுத்தி, இருமுறை பிரதமர்களை உருவாக்கினார். இத்தகைய செயல்வீரரான காமராசர், அனைத்துக் கட்சியினராலும் மதிக்கப்பெறும் பெருந்தலைவராக உயர்ந்தார்.

காமராசருக்குச் செய்த சிறப்புகள்

காமராசருக்கு நடுவணரசு பாரத ரத்னா (இந்திய மாமணி) விருது அளித்துச் சிறப்பித்தது. நாடாளுமன்றத்தில் இவருக்கு ஆளுயர வெண்கலச்சிலையை நிறுவியது. தமிழக அரசு, இவரின் கல்விப்பணியைச் சிறப்பிக்கும் வகையில் மதுரைப் பல்கலைக் கழகத்திற்கு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் எனப் பெயர் சூட்டியது; கன்னியாகுமரியில் காமராசருக்கு மணிமண்டபம் கட்டியது; சென்னை மெரீனா கடற்கரைச் சாலையில்

சிலையமைத்துச் சிறப்பித்தது. காமராசர் வாழ்ந்த சென்னை இல்லம் நினைவு இல்லமாக ஆக்கப்பட்டது.

விருதுநகரிலிருந்த காமராசரின் இல்லமும் அரசுடைமையாக்கி நினைவு இல்லமாக்கப்பட்டது. தேனாம்பேட்டையில் காமராசர் அரங்கம் நிறுவப்பட்டது. தமிழக அரசு, காமராசர் பிறந்த நாளான சூலை பதினைந்தாம் நாளை ஆண்டுதோறும் கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்துள்ளது. இவரைக் கல்விக் கண் திறந்தவர் எனத் தமிழுலகம் போற்றுகிறது.

மறைவு

காந்தியடிகள் மீது அளவற்ற அன்பு கொண்ட காமராசர், 1975ஆம் ஆண்டு காந்தியடிகளின் பிறந்தநாளான அக்டோபர் இரண்டாம் நாள் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் மறைந்தாலும் இன்றைய தலைவர்களுக்கு முன்னோடியாக நின்று பெருந்தலைவர் என்னும் பொருத்தமான புகழுரையால் நிலைத்து வாழ்கிறார்.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. காமராசர், தம் பேச்சாற்றலை வளர்த்துக்கொண்ட இடம் ________ புத்தகச்சாலை.
2. காமராசர் ஆட்சிக்காலத்தில் கல்வியமைச்சராக இருந்தவர் ________ .
3. காமராசருக்கு நடுவணரசு ________________ விருது அளித்துச் சிறப்பித்தது.
4. காமராசர் பிறந்த நாளை ______________ ஆகக் கொண்டாடுகிறோம்.
5. காமராசர் முதலமைச்சராகப் பதவியேற்ற ஆண்டு __________ .

ஆ) குறுவினாக்கள்

1. காமராசரின் பிறப்பு, பெற்றோர் பற்றி எழுதுக.
2. காமராசர் பங்கேற்ற விடுதலைப்போராட்டங்கள் யாவை ?
3. காமராசர், தலைவர்களை உருவாக்குபவர் என அழைக்கப்படக் காரணம் யாது ?
4. காமராசர் செய்த நிலச்சீர்திருத்தம்பற்றி எழுதுக.
5. காமராசர் திட்டம் என்றால் என்ன ?
6. காமராசரின் நினைவாகத் தமிழக அரசு செய்த சிறப்புகள் யாவை ?

இ) சிறுவினாக்கள்

1. காமராசரின் அரசியல் ஈடுபாடுபற்றி எழுதுக.
2. காமராசர் ஆட்சிக்காலத்தில் ஏற்பட்ட தொழில் முன்னேற்றம் பற்றி எழுதுக.
3. ‘கல்விக்கண் திறந்த முதல்வர்’ எனக் காமராசர் போற்றப்படக் காரணம் யாது ?
4. காமராசர், பிரதமர்களை உருவாக்கிய நிகழ்வுகளை விவரிக்க.

ஈ) நெடுவினா

முதலமைச்சராகக் காமராசர் நாட்டுக்குச் செய்த வளர்ச்சிப் பணிகளைத் தொகுத்துரைக்க.

கிளி பேசுகிறது

பங்களாவைச் சுற்றிலும் பெரிய தோட்டம் இருந்தது. அந்தத் தோட்டத்தில் எத்தனையோ விதமான மரங்கள், செடிகள், கொடிகள்! இலைகளில் எத்தனை எத்தனை வகைகள்; மலர்களில் எத்தனை எத்தனை நிறங்கள்; மலர்களில் எத்தனை எத்தனை விதங்கள்; கனிகளில் எத்தனை எத்தனை சுவைகள்! அம்மம்மா! அவற்றின் அழகை மனத்தினால் உணரமுடியுமே தவிர, வாயினால் விவரிக்கமுடியாது.

எல்லாருக்கும் பொதுவாக இயற்கை அளிக்கும் அந்தச் செல்வத்தைப் பங்களாவில் குடியிருந்த சிலர் மட்டும் ஏகபோகமாக அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், தங்களைப் போன்ற மனிதர்களைத்தான் அவற்றை அனுபவிக்க முடியாதபடி அவர்களால் தடுக்க முடிந்ததே தவிர, எங்களைப் போன்ற புள்ளினங்களை அவ்வாறு தடுக்கமுடியவில்லை.

தோட்டம் அவர்களுக்குச் சொந்தமாயிருக்கலாம்; அதன்மூலம் இயற்கை அளிக்கும் செல்வம் அனைத்தையும் அவர்களே அனுபவிப்பதற்கு உரிமையிருக்கலாம்; அந்த உரிமையும் சொந்தமும் எங்களுக்கு இல்லாமலிருக்கலாம். ஆனால், எங்களுடைய தயவு அவர்களுக்கு இல்லையென்றால், அந்த இயற்கைச் செல்வத்தில் கொஞ்சமாவது அவர்கள் அனுபவிக்க முடியுமா?

யாருடைய அனுமதியுமின்றி என் தாயும் நானும் அந்தத் தோட்டத்திலிருந்த ஒரு மாமரப் பொந்தில் வசித்து வந்தோம். எங்களுக்கு அரசன் கிடையாது; சட்டம் கிடையாது; தண்டனையும் கிடையாது. நாங்கள் அடிமைகளாய் இருக்கவுமில்லை; விடுதலை கோரவும் இல்லை.

நாடு எங்களுடையது; காடு எங்களுடையது; கடல் எங்களுடையது; வானம் எங்களுடையது; மலைகள் ஆறுகளெல்லாம் எங்களுடையவை; மரம், செடி, கொடி எல்லாமே எங்களுடையவை.

'என்னுடையது' என்று நாங்கள் எதனையுமே சொல்லிக் கொள்வதில்லை; எல்லைக் கோடு வகுத்துக் கொள்வதில்லை; பத்திரமோ கித்திரமோ எழுதிக் கொள்வதில்லை; ரிஜிஸ்தரோ கிஜிஸ்தரோ பண்ணிக் கொள்வதில்லை; எல்லைச்சண்டை போட்டுக்கொண்டு தொல்லைப்படுவதும் இல்லை; கோர்ட்டுக்குப் போய்க் கூப்பாடு போடுவதுமில்லை.

இன்னும் இறந்த காலத்தைக் குறித்து நாங்கள் வருந்துவதில்லை; எதிர்காலத்தைக் குறித்து ஏங்குவதுமில்லை; நிகழ்காலத்தோடு எங்கள் நினைவு நின்றுவிடும். ஆடுவதும் பாடுவதும் ஆனந்தக் கூத்தாடுவதுமாகவே எங்கள் பொழுதெல்லாம் கழியும்.

ஆகா! என்ன அற்புதமான வாழ்வு! எவ்வளவு மகிழ்வான வாழ்வு!

இத்தகைய ஆனந்த வாழ்வுக்கு ஒரு சமயம் பங்கம் நேர்ந்துவிட்டது. என்னுடைய அம்மா தேடிக்கொண்டுவந்து கொடுத்த இரையைத் தின்று நான் வளர்ந்து கொண்டிருந்த காலம். அப்போதுதான், எனக்கு இறகுகள் முளைத்துக் கொண்டிருந்தன. புதிய இறகு முளைப்பதோடு என் உள்ளத்தில் புதிய உற்சாகமும் பொங்கி வழிந்து கொண்டிருந்தது. பொந்தில் இருந்தபடி வானத்தை எட்டி எட்டிப் பார்ப்பேன். அந்த நீலவானிலே எத்தனை எத்தனையோ பறவைகள் வட்டமிட்டுப் பறந்து கொண்டிருக்கும். அவற்றைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கும் பறந்துசென்று அவற்றுடன் கலந்து கொள்ளவேண்டும்போல் தோன்றும். அந்தப் பறவைகள் என்னை அழைத்தனவோ என்னவோ, எனக்குத் தெரியாது! எனக்கு மட்டும் அவை ‘வா, வா’ என்று அழைப்பது போலிருக்கும்.

ஒருநாள் என்னுடைய ஆவலை அம்மாவிடம் தெரிவித்தேன். “அவசரப் படவேண்டாம்; காலம் வரும்போது உன்னுடைய ஆசை நிறைவேறும்” என்று அம்மா சொல்லிவிட்டாள்.

“காலம் எப்போது வருவது, ஆசை எப்போது நிறைவேறுவது?” என்று எனக்கு ஆத்திரமாய் வந்தது.

அதை அதிகப்படுத்துவதைப்போல் அன்று ஒரு சிட்டுக்குருவி, நான் இருந்த மாமரத்துக்கும் பூமிக்குமாகப் பறந்து, ‘கீச், கீச்’ என்று விளையாடி என்னுடைய ஆத்திரத்தை மேலும்மேலும் கிளப்பிவிட்டுக்கொண்டே இருந்தது.

நான் துணிந்துவிட்டேன். “வான வீதிக்கு வேண்டுமானால் போகவேண்டாம்; இந்தச் சிட்டுக்குருவிபோல் இங்கேயே மாமரத்துக்கும் பூமிக்குமாகப் பறந்துகொண்டிருந்தால் என்ன?” என்று எண்ணிக் கீழே இறங்குவதற்காகச் சிறகடித்தேன். ஆனால், என்ன ஏமாற்றம்! ‘பொத்’ தென்று கீழே விழுந்துவிட்டேன்.

உடம்பில் பலமான அடி; என்னால் வேதனையைத் தாங்க முடியவில்லை, ‘கீ, கீ’ என்று கத்தத் தொடங்கிவிட்டேன்.

அப்போது யாரோ ஒரு சிறுமி அங்கே வந்தாள். அவள் அந்தப் பங்களாவில் குடியிருப்பவர்களைச் சேர்ந்தவள் போலிருக்கிறது. என்னுடைய கதறலைக் கேட்டதும்

நான் இருக்கும் இடத்திற்கு ஓடோடி வந்தாள். என்னைக் கண்டதும் அவளுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு ஆனந்தம் உண்டாகிவிட்டதோ, தெரியவில்லை. "அக்கா! கிளி கிளி கிளி! அக்கா! கிளி கிளி கிளி!" என்று அவள் கத்தினாள்.

உடனே அந்தப் பங்களாவிற்குள்ளிருந்து இன்னொருபெண், "எங்கேடி, எங்கேடி" என்று கேட்டுக்கொண்டே ஓட்டமாய் ஓடி வந்தாள்.

அவ்வளவுதான்; அடுத்தகணம் நான் அவர்களால் கைது செய்யப்பட்டேன்.

என்னுடைய அறியாமையால், ஆத்திரத்தால், அவசரத்தால், எனக்கு இயற்கையாகவே கிடைத்திருந்த சுதந்தரம் அன்று அநியாயமாகப் பறிக்கப்பட்டுவிட்டது!

"விடுதலை விடுதலை விடுதலை!" என்று நான் கதறும்படியாகிவிட்டது!

அவர்கள் என்னமோ, என்னிடம் எவ்வளவோ அன்புகாட்டத்தான் செய்தார்கள். பழமும் பாலும் பரிந்துபரிந்து ஊட்டினார்கள். அடிக்கொரு தரம் என்னைத் தடவித் தடவிக்கொடுத்தார்கள். ஆத்திரத்தால் நான் 'வெடுக் வெடுக்' கென்று கடிப்பதை அன்பினால் முத்தமிடுவதாக அந்த அப்பாவிகள் நினைத்துக்கொண்டார்கள்!

ஆனால், எனக்கோ பழமும் வேண்டியிருக்கவில்லை; பாலும் வேண்டியிருக்கவில்லை. யாருக்குவேண்டும், இந்தப் பழமும் பாலும்?

ஐயோ! நம்மைக் காணாமல் அம்மா எப்படித் தவிக்கிறாளோ!

ஆமாம். அம்மாவின் பேச்சைக் கேட்காத நமக்கு இதுவும் வேண்டும், இன்னமும் வேண்டியதுதான்!

இப்படியெல்லாம் என்னவெல்லாமோ எண்ணியெண்ணி என் மனம் அலைபாய்ந்தது.

அந்தச் சிறுமிகளோ என்னுடைய சுதந்தர வேட்கையைக் கொஞ்சமாவது பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. மேலும்மேலும் ராஜோபசாரம் செய்து கொண்டே இருந்தார்கள்.

என்னுடைய சிறைச்சாலைக்குத்தான் எத்தனைவிதமான சிங்காரம்! எத்தனை விதமான வண்ணப் பூச்சு; எத்தனைவிதமான பட்டுக் குஞ்சங்கள்!

ஆகா! அதன் அழகுதான் அவர்களுக்கு எவ்வளவு இன்பத்தைக் கொடுத்தது!

என்னை அடிமைகொண்ட அவர்களுக்கு வேண்டுமானால் அந்தப் பாழும் சிறைச்சாலை ஆனந்தத்தை அளிக்கலாம்; அடிமைப்பட்ட எனக்கோ அதைப் பார்க்கும்போதெல்லாம் ஆத்திரம்தானே பற்றிக்கொண்டு வருகிறது!

எனக்கு மட்டும் போதிய பலம் இருந்திருக்குமானால், அதனை அன்றே உடைத்தெறிந்துவிட்டல்லவா வெளியே வந்திருப்பேன்?

வேடிக்கையைக் கேளுங்கள்; அதே பங்களாவில் என்னைப்போல் ஒரு நாயும் வளர்ந்து வந்தது. அதைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு ஒரே எரிச்சலாயிருக்கும். அதன் அடிமை வாழ்வில்தான் அதற்கு எவ்வளவு திருப்தி.

நன்றியுள்ள பிராணி என்று பெயரெடுக்க வேண்டுமாம், பெயர்! அதற்காக அது தன்னை யார் என்ன சொன்னாலும் பொருட்படுத்துவதில்லை.

சீ, நாயே! என்று எத்தனை முறைதான் விரட்டியடிக்கட்டுமே; இல்லை, அடித்துத் துரத்தட்டுமே – ஊகூம், அப்போதும் அது வாலை ஆட்டுஆட்டு என்று ஆட்டிக்கொண்டு, அவர்களுக்குப் பின்னால் சுற்றுசுற்று என்று சுற்றிக்கொண்டுதானிருக்கும். அதற்குச் சுதந்தரமும் வேண்டா, ஒன்றும் வேண்டா; எச்சில் சோறும் எலும்பும், 'நன்றியுள்ள பிராணி' என்ற பட்டமும் கிடைத்தால் போதும்!

சீ! சீ! அதுவும் ஒரு பிறவியா!

அதை அவிழ்த்து வெளியே விடுகிற மாதிரி என்னையும் வெளியே விட்டால்....?

அந்த நாயைப்போல் நான் திரும்பியா வருவேன், அடிமையாயிருக்க? "ஆனந்த சுதந்தரம் அடைந்துவிட்டோம்!" என்று ஆகாய வீதியை நோக்கிக் கம்பி நீட்டிவிட மாட்டேனா!

அன்றொரு நாள் அந்தச் சிறுமிகள் இருவரும் என்னிடம் வந்து, "ரங்க ரங்க ரங்க ரங்க ரங்கா! அக் அக் கக் கா!" என்று கூச்சலிட்டனர்.

நானும் அப்படியே சொன்னேனா இல்லையோ, அவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி!

ஏன் தெரியுமா? அவர்கள் எனக்குப் பேசக் கற்றுக்கொடுத்தார்களாம்; நான் உடனே பேசக் கற்றுக்கொண்டுவிட்டேனாம்!

என்ன அசட்டுத்தனம்! எனக்கிருந்த வெறுப்பில் நான் அவர்களுக்கு அழகு அல்லவா காட்டினேன்? அதற்குக் கோபித்துக் கொள்வதற்குப் பதிலாக இப்படி ஆனந்தப்படுகிறார்களே!

இப்படி எண்ணி நான் வியந்துகொண்டிருந்தபோது, "அக்கா! இந்தக் கிளிக்கு இப்போது இறக்கைகள் வளர்ந்துவிட்டன; கத்தரிக்கோல் கொண்டு வருகிறேன், வெட்டிவிடுகிறாயா?" என்றாள் தங்கை.

எனக்குப் பகீரென்றது. "அடிப் பாவிகளா!" என்று சபித்தேன்.

நல்ல வேளையாக அக்கா அதற்கு ஒப்பவில்லை. "இறக்கைகள் வளர்ந்த பிறகுதான் கிளி பார்ப்பதற்கு அழகாயிருக்கிறது! அதனை வெட்டிவிட்டால் அவலட்சணமாய்ப் போய்விடாதோ?" என்றாள்.

'அப்பாடி! பிழைத்தேன்!' என்று நான் பெருமூச்சுவிட்டேன். அந்தப் போக்கிரிப் பெண் அத்துடன் நிற்கவில்லை. "எனக்கென்ன, ஏமாந்தால் என்றைக்காவது ஒருநாள் அது ஓடிவிடப்போகிறது!" என்று, அவள் தன் அக்காவை எச்சரித்தாள்.

"ஏண்டி, இவ்வளவு நாள் நம்மிடம் வளர்ந்தபிறகு அது எங்கேயாவது நன்றி கெட்டத்தனமாக ஓடிவிடுமா?" என்றாள் அக்கா.

ஐயோ, பாவம்! என்னையும் அவள் அந்தக் கேடுகெட்ட நாயுடன் சேர்த்துக் கொண்டாள் போலும்! இவளை நானா என்னிடம் நன்றிகாட்டச் சொல்லி அழைத்தேன்?

நிரம்ப அழகுதான்!

“கூண்டின் கதவைத் திறந்துதான் பாரேன்; அது நன்றியில்லாதவாறு நடந்துகொள்கிறதா, இல்லையா என்று!” என்றாள் தங்கை.

அக்காவுக்கு ரோசம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. “திறந்தால் என்னடி? ஓடிப்போய்விடுமா?” என்று தங்கையிடம் வீம்பு பேசிக்கொண்டே, நான் அத்தனை நாளும் அடைபட்டிருந்த சிறையின் கதவை அவள் அன்று திறந்தே விட்டாள்!

அவ்வளவுதான்; அதற்குப் பிறகு ஒரு நிமிடமாவது அங்கே தாமதிக்க எனக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? “விடுதலை விடுதலை விடுதலை!” என்று கூவிக்கொண்டே எடுத்தேன் ஓட்டம்!

ஆகா! எத்தனையோ நாளுக்குப் பிறகு, எவ்வளவோ இன்னல்களுக்குப் பிறகு, நான் கொஞ்சமும் எதிர்பாராதவிதமாகக் கிடைத்த விடுதலையில்தான் என்னே இன்பம்! என்னே இன்பம்!

நன்றி: விந்தன் கதைகள் – சிறுகதைத் தொகுப்பு.

மாதிரி வினாக்கள்

நெடுவினாக்கள்

1. கிளி சிறைபிடிக்கப்பட்டதனை விளக்குக.
2. கிளி எவ்வாறு விடுதலை அடைந்தது?

செயல்திட்டம்

இக்கதைப் பகுதியிலுள்ள பிறமொழிச்சொற்களை எடுத்தெழுதி, அவற்றிற்கு இணையான தமிழ்ச்சொற்களையும் எழுதுக.

புணர்ச்சி

நிலைமொழியின் ஈறும் வருமொழியின் முதலும் சேருவது புணர்ச்சி ஆகும்.

வாழை + மரம் = வாழைமரம்.

வாழைமரம் – இதில் 'வாழை', 'மரம்' என்னும் இருசொற்கள் இணைந்து ஒரு சொல்லாவதனை அறிவீர்கள். வாழை என்னும் சொல் நிலைமொழி. அதன் ஈற்றெழுத்து (ழ் + ஐ = ழை) 'ஐ'. அதனை அடுத்து வரும் (ம் + அ = ம) மரம் என்னும்சொல் வருமொழி. அச்சொல்லின் முதல் ம் என்பது. இதில் இருசொற்களும் இயல்பாகப் புணர்கின்றன. அதனால், இதனை இயல்புப் புணர்ச்சி என்பர்.

வாழை + பழம் = வாழைப்பழம்.

வாழை, பழம் ஆகிய சொற்கள் இரண்டும் இணையும்போது, ப் – என்னும் மெய் தோன்றுகின்றது. இதனை விகாரப் புணர்ச்சி என்பர். இவ்விகாரப் புணர்ச்சி தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும்.

(எ–டு) தமிழ் + பாடம் = தமிழ்ப் பாடம் – தோன்றல் புணர்ச்சி (ப் –தோன்றுதல்)

கல்+ சிலை = கற்சிலை – திரிதல் புணர்ச்சி (ல், ற் – ஆதல்)

மரம் + வேர் = மரவேர் – கெடுதல் புணர்ச்சி (ம் – கெடுதல்)

அ) குற்றியலுகரப் புணர்ச்சி

கு, சு, டு, து, பு, று ஆகிய ஆறும் நெடிலடுத்தும் இரண்டு முதலிய பல எழுத்துகளைச் சார்ந்தும் வரும்போது, தன் மாத்திரையளவில் குறைந்து ஒலிக்கும். இதனைக் குற்றியலுகரம் என்பர். குற்றியலுகரம் பற்றியும் அதன் வகைகள் பற்றியும்முன் வகுப்புகளில் படித்திருக்கிறீர்கள். இங்குக் குற்றியலுகரப் புணர்ச்சி குறித்துக் காண்போம்.

1. நிலைமொழியின் ஈற்றெழுத்துக் குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதலெழுத்து உயிராக இருந்தால், நிலைமொழியிலுள்ள குற்றியலுகரம், தான் ஊர்ந்து வந்த வல்லின மெய்யைவிட்டு நீங்கும்.

(எ–டு) 1. பந்து + ஆட்டம் = பந்த் + உ + ஆட்டம் – உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் எனும் விதிப்படி உ நீங்கியது. உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே என்னும் விதிப்படி, பந்த் + ஆட்டம் = பந்தாட்டம் என நிலைமொழி இறுதிமெய், வருமொழியின் முதல் எழுத்தாகிய உயிரோடு இணைந்து புணர்ந்தது.

குறிப்பு : நிலைமொழி ஈற்று முற்றுகரமும், வருமொழியின் முதலெழுத்து உயிர்எழுத்தாக இருப்பின், குற்றியலுகரப் புணர்ச்சியைப் போலப் புணரும்.

(எ–டு) உயர்வு (வ் + உ) + அடைந்தார் = உயர்வடைந்தார்

2. நிலைமொழியின் ஈறு (கடைசி) குற்றியலுகரமாக இருந்து, வருமொழியின் முதல் எழுத்து, ய கரமாக இருந்து புணரும்போது, உகரம் இகரமாகத் திரியும். இதனைக் குற்றியலிகரப் புணர்ச்சி என்பர்.

குரங்கு + யாது = குரங் (க் + உ) + யாது = குரங்க் + இ + யாது = குரங்கியாது.

உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும்
யவ்வரின் இய்யாம் முற்றுமற்றொ ரோவழி – நன்னூல், 164

(உக்குறள் – குறுகிய உகரம்; இய்யாம் – இகரமாகும்.)

3. டகரம் (ட்), ஊர்ந்துவரும் நெடில் தொடர்க்குற்றியலுகரம், றகரம் (ற்) ஊர்ந்து வரும் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் வருமொழியோடு இணையும்போது, அவை ஊர்ந்துவரும் ஒற்று இரட்டித்துப் புணரும்.

(எ–டு) காடு + கோழி = காட் (ட்+உ) + கோழி = காட்டுக்கோழி
ஆறு + பாலம் = ஆற் (ற்+உ) + பாலம் = ஆற்றுப்பாலம்
கிணறு + தவளை = கிணற் (ற்+உ) + தவளை = கிணற்றுத்தவளை

நெடிலோ டுயிர்த் தொடர்க்குற் றுகரங்களுள்
டறவொற் றிரட்டும் வேற்றுமை மிகவே. – நன்னூல், 183

4. வல்லினத் தொடர்க்குற்றியலுகரம் தவிர, ஏனைய குற்றியலுகரங்களின்முன் வரும் வல்லினம், அல்வழிப் புணர்ச்சியில் மிகாது.

(எ–டு) நாகு + கடிது = நாகு கடிது.
எஃகு + சிறிது = எஃகு சிறிது.
வரகு + தீது = வரகு தீது.
குரங்கு + பெரிது = குரங்கு பெரிது.
தெள்கு + சிறிது = தெள்கு சிறிது.

வன்றொடர் அல்லன முன்மிகா அல்வழி – நன்னூல், 181

5. வேற்றுமைப் புணர்ச்சியில், இடைத்தொடர் முன்னும், ஆய்தத் தொடர் முன்னும், ஒற்று இடையே மிகாத நெடிற்றொடர்முன்னும், உயிர்த்தொடர் முன்னும் வரும் வல்லினம் மிகாது.

(எ–டு) தெள்கு + கால் = தெள்குகால் (தெள்கு – பேன்)
எஃகு + சிறுமை = எஃகுசிறுமை
நாகு + தலை = நாகுதலை.

இடைத்தொடர் ஆய்தத் தொடரொற் றிடையின்
மிகாநெடில் உயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை – நன்னூல், 182

6. மெல்லினத்தொடர்க்குற்றியலுகரங்களுள் சில வேற்றுமைப் புணர்ச்சியில் தமக்கு இனமான வல்லினத்தொடராய் முடியும்.

(எ–டு)	மருந்து	+	பை	=	மருத்துப்பை.
	இரும்பு	+	ஆணி	=	இருப்பாணி
	கரும்பு	+	வில்	=	கருப்புவில்.
	செம்பு	+	குடம்	=	செப்புக்குடம்

மென்றொடர் மொழியுள் சிலவேற் றுமையில்
தம்மின வன்றொட ராகா மன்னே. – நன்னூல், 184.

பயிற்சி : விடுபட்ட இடங்களை நிரப்புக.

1. பொன் + வளையல் = ______________
2. வட்டம் + ________ = வட்டப்பலகை
3. குளம் + கரை = ______________
4. குருத்து + ________ = குருத்தோலை
5. உலகு + உயிர்கள் = ______________
6. இரும்பு + ________ = இருப்பாணி

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

1. கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. வாழை + மரம் = வாழைமரம் என்பது ______________

   அ) இயல்புப் புணர்ச்சி ஆ) விகாரப் புணர்ச்சி இ) உடம்படுமெய்

2. மரம் + வேர் = மரவேர். இது ______________

   அ) தோன்றல் விகாரம் ஆ) திரிதல் விகாரம் இ) கெடுதல் விகாரம்

3. கன்று + ஆ என்பது ______________ எனப் புணரும்.

   அ) கற்றா ஆ) கன்றா இ) கறா

2. பொருத்துக.

இயல்புப் புணர்ச்சி	–	கற்கோட்டை
தோன்றல் விகாரம்	–	மரவேல்
கெடுதல் விகாரம்	–	வாழைப்பழம்
திரிதல் விகாரம்	–	பொன்வளையல்

ஆ) குறுவினாக்கள்

1. புணர்ச்சி என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?
2. விகாரப் புணர்ச்சி என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?
3. உயிர்வரின் உக்குறள் மெய்விட் டோடும் – சான்றுதந்து விளக்குக.
4. டகர, றகரக் குற்றியலுகரப் புணர்ச்சிக்குச் சான்று தருக.
5. குற்றியலுகரப் புணர்ச்சியில் வல்லினம் மிகா இடங்கள் இரண்டனுக்குச் சான்றுதருக.
6. மென்தொடர்க் குற்றியலுகரம் வன்தொடராய் முடிவதற்குச் சான்று காட்டுக.

வகுப்பறைத்திறன்கள்

குழுக் கலந்துரையாடல்

ஓரமாய் வருவேன்
ஒழுங்காய்ப் போவேன்
ஊர்திகள் வந்தால்
ஒதுங்கியே செல்வேன்
இடப்பக்கம் நடப்பேன்
இருபக்கம் பார்ப்பேன்
சடக்கென்று நிற்பேன்
சாலையைக் கடப்பேன்!

1. இப்பாடல் கூறும் கருத்து என்ன?
2. நீங்கள் சாலைவிதிகளைப் பின்பற்றுகிறீர்களா?

சாலைவிதிகளைப்பின்பற்றுவதால் ஏற்படும் நன்மைகளையும், பின்பற்றாவிடில் ஏற்படும் விளைவுகளையும் குழுவில் கலந்துரையாடுக.

பேசுதல் திறன் : ஐந்து மணித்துளிகள் பேசுக.

1. நான் விரும்பும் அறிவியல் அறிஞர்
2. நான் ஆசிரியரானால்....

எழுதுதல் திறன்

அ) பின்வரும் சொற்றொடர்களைப் பிரித்து எழுதுக.

(எ–டு) நான் விரைவாகச் சென்றதால் உரிய நேரத்தில் அங்கு இருக்க முடிந்தது.

நான் விரைவாகச் சென்றேன். அதனால், உரிய நேரத்தில் அங்கு இருக்க முடிந்தது.

பயிற்சி

1. எனக்குத் தூக்கம் வந்துவிட்டதனால் அந்த நாடகத்தை முழுவதும் பார்க்க முடியவில்லை.
2. மணி நேற்று வந்து என்னிடம் புத்தகம் வாங்கிச்சென்றான்.

3. உண்மையை உணர்ந்த முத்து பணத்தை மாறனிடம் கொடுத்தார்.
4. நான் நாளை ஊருக்குப்போகும்போது கண்ணனைச் சந்திப்பேன்.
5. பாம்பு ஓடியதனை நான் பார்த்தேன்.

ஆ) ஒரே சொற்றொடராக்குக.

(எ–டு) நான் மும்பை சென்றேன். அவனும் மும்பை சென்றான்.
நானும் அவனும் மும்பை சென்றோம்.

பயிற்சி :

1. நீ வீட்டுக்குப் போ. புத்தகம் எடுத்து வா.
2. இனியன் பாட்டுப் பாடுவார். அப்போது கண்களை மூடிக் கொள்வார்.
3. யானை வந்தது. அதனைப் பார்த்துக் குழந்தை சிரித்தது.
4. சேரன் போரில் தோற்றான்; அதனால், சிறையில் அடைக்கப்பட்டான்.

மையக்கருத்தறிதல் திறன்

பின்வரும் பத்தியினைப் படித்துணர்ந்து மையக்கருத்தினை ஒரே வரியில் எழுதுக.

வேற்றுமைகளைப் பயன்படுத்திக்கொண்டு குறுகிய வாழ்க்கைக்காக எப்போதும் அமைதியைக் குலைப்பதும், மக்களை ஏய்ப்பதும் போலிகளின் செயல்.

உண்மையாளர்களுக்குள் கருத்துவேற்றுமை இருப்பினும் போராட்டம் நேராது. மாறாக, ஒற்றுமையும் நாட்டுநலத்திற்கேற்பத் தம் வேற்றுமைகளைப் பயன்படுத்தும் பண்பாடும் இருக்கும்.

மையக்கருத்து : வேற்றுமை வளர்த்துத் தன்னலம் காண்போர் போலிகள்; வேற்றுமை களைந்து ஒற்றுமை காண்போர் உண்மையாளர்கள்.

பயிற்சி : மையக்கருத்து எழுதுக.

வேற்றுமைகளை அழிவுக்குப் பயன்படுத்தாமல் அவற்றையும் நன்மைக்குப் பயன்படுத்தி முன்னேறுதல் வேண்டும். அவரவர் செயல்களுக்கேற்ப நன்மை தீமைகள் ஏற்படுவதனை அவரவரே அறியுமாறு விட்டுவிடுதல் வேண்டும். அதனைவிடுத்துத் தீமைகளை ஒழிப்போம் என வரிந்து கட்டுதலினால் ஏதும் பயன்நேராது. அதனால், மேலும் கலகமே விளையும். தீமைகளை ஒழிக்க பொதுஒழுங்கை அதாவது, சட்டத்தை எல்லா அரசுகளும் வலியுறுத்துகின்றன. அதற்கு அச்சட்டங்களும் பெரிதும் துணைபுரிகின்றன.

மையக்கருத்து ____ .

மொழித்திறன் பயிற்சி

வல்லினம் மிகும் இடங்களும் வல்லினம் மிகா இடங்களும்

இரண்டு சொற்களைச் சேர்த்து எழுதும்போது இடையில் சில இடங்களில் வல்லின மெய் எழுத்துகள் (க், ச், த், ப்) மிக்கு வரும். மெய்யெழுத்து மிக்கு வரவேண்டிய இடத்தில் மிகாமலும் மிகாத இடத்தில் மிக்கும் வந்தால் பொருள் மாறுபடும். ஆகவே, வல்லினம் மிகும் இடங்களையும் மிகா இடங்களையும் தெளிவாக அறிதல் வேண்டும்.

வல்லினம் மிகும் இடங்கள்

1. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துகளை அடுத்தும் எ என்னும் வினாவை அடுத்தும் வரும் வல்லினங்களாகிய க, ச, த, ப மிகும்.

அ + பையன் = அப்பையன் இ + செடி = இச்செடி

எ + பணி = எப்பணி

2. அந்த, இந்த, எந்த, அங்கு, இங்கு, எங்கு, அப்படி, இப்படி, எப்படி என்ற சுட்டு, வினாச்சொற்களை அடுத்து வல்லினம் மிகும்.

அந்த + கோவில் = அந்தக்கோவில்

அங்கு + சென்றான் = அங்குச்சென்றான்

எங்கு + போனான் = எங்குப்போனான்

3. இரண்டாம் வேற்றுமை விரியில் வல்லினம் மிகும்.

நூலை + படி = நூலைப்படி பாலை + குடி = பாலைக்குடி

4. நான்காம் வேற்றுமை விரியில் வல்லினம்மிகும்.

அவனுக்கு + கொடுத்தான் = அவனுக்குக்கொடுத்தான்

பணிக்கு + சென்றான் = பணிக்குச்சென்றான்.

5. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்தாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் வல்லினம் மிகும்.

தண்ணீர் + குடம் = தண்ணீர்க்குடம் மரம் + பெட்டி = மரப்பெட்டி

பூட்டு + சாவி = பூட்டுச்சாவி விழி + புனல் = விழிப்புனல்.

6. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

பச்சை + பட்டு = பச்சைப்பட்டு பச்சை + கிளி = பச்சைக்கிளி

7. இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும்.

சாரை + பாம்பு = சாரைப் பாம்பு மல்லிகை + பூ = மல்லிகைப்பூ

8. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்.

மலர் + கண் = மலர்க்கண் தாமரை + கை = தாமரைக்கை.

9. ஒரெழுத்து ஒரு மொழியின் பின் வல்லினம் மிகும்.

தீ + சுடர் = தீச்சுடர் பூ + கூடை = பூக்கூடை

10. ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின் பின் வல்லினம் மிகும்.

அழியா + புகழ் = அழியாப்புகழ் ஓடா + குதிரை = ஓடாக்குதிரை

11. வன்தொடர் குற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

பத்து + பாட்டு = பத்துப்பாட்டு　　எட்டு + தொகை = எட்டுத்தொகை

12. ட, ற ஒற்று இரட்டிக்கும் உயிர், நெடில் தொடர்க்குற்றியலுகரங்களின் பின் வல்லினம் மிகும்.

ஆடு + பட்டி = ஆட்டுப்பட்டி　　நாடு + பற்று = நாட்டுப்பற்று

13. முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்.

பொது + தேர்வு = பொதுத்தேர்வு　　திரு + குறள் = திருக்குறள்

14. சால, தவ முதலிய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

சால + பேசினான் = சாலப்பேசினான்.　　தவ + சிறிது = தவச்சிறிது.

15. ஆய், என, இனி, ஆக முதலிய இடைச்சொற்களின் பின் வல்லினம் மிகும்.

என + கூறினான் = எனக் கூறினான்.　　இனி + காண்போம் = இனிக்காண்போம்.

வல்லினம் மிகா இடங்கள்

1. அது, இது, அவை, இவை எனும் சுட்டுச் சொற்களின் பின்னும் எது, எவை எனும் வினாச்சொற்களின் பின்னும் வல்லினம் மிகாது.

அது + பறந்தது = அது பறந்தது.

அவை + பறந்தன = அவை பறந்தன.

எது + தங்கம் = எது தங்கம்

எவை + சென்றன = எவை சென்றன.

2. ஆ, ஏ, ஓ எனும் வினா எழுத்துகளின்பின் வல்லினம் மிகாது.

அவனா + சென்றான் = அவனா சென்றான்.

அவனோ+ பேசினான் = அவனோ பேசினான்.

அவனே + சிரித்தான் = அவனே சிரித்தான்.

3. எழுவாய்த்தொடரில் வல்லினம் மிகாது.

மலர் + பூத்தது = மலர்பூத்தது

வண்டு + பறந்தது = வண்டுபறந்தது.

4. அத்தனை, இத்தனை, எத்தனை என்னும் சொற்களுக்குப் பின் வல்லினம் மிகாது.

அத்தனை + படங்கள் = அத்தனை படங்கள்

இத்தனை + பறவைகள் = இத்தனை பறவைகள்

எத்தனை + காக்கைகள் = எத்தனை காக்கைகள்

5. வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

ஊறு + காய் = ஊறுகாய்

சுடு + சோறு = சுடுசோறு

6. உம்மைத்தொகையில் வல்லினம் மிகாது.

கபிலபரணர்

இரவுபகல்

7. இரண்டாம் வேற்றுமைத்தொகையில் வல்லினம் மிகாது.

தமிழ் + கற்றார் = தமிழ்கற்றார்.

கடல் + கடந்தார்= கடல்கடந்தார்.

8. மூன்றாம் வேற்றுமை உருபுகளின் பின் (ஒடு, ஓடு) வல்லினம் மிகாது.

பூவொடு + சேர்ந்த = பூவொடுசேர்ந்த

கபிலரோடு + பரணர் = கபிலரோடுபரணர்

9. எட்டு, பத்து தவிரப் பிற எண்களுக்குப்பின் வல்லினம் மிகாது.

ஒன்று + கொடு = ஒன்றுகொடு

இரண்டு + பேர் = இரண்டுபேர்

10. வியங்கோள் வினைமுற்றுக்குப்பின் வல்லினம் மிகாது.

வாழ்க + தமிழ் = வாழ்கதமிழ்

வாழிய + பல்லாண்டு = வாழியபல்லாண்டு

11. இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்களில் வல்லினம் மிகாது.

சல + சல = சலசல

பாம்பு + பாம்பு = பாம்புபாம்பு

12. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் தவிரப் பிறபெயரெச்சங்களின் பின் வல்லினம் மிகாது.

கற்ற + சிறுவன் = கற்றசிறுவன்

சிறிய + பெண் = சிறியபெண்

பயிற்சி : தேவையான இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

1. அந்த பையனை நன்றாக படிக்க செய்தல் வேண்டும்.
2. வந்த பையன் சொன்னச் செய்திகளை பொறுமையாக கேட்டல் வேண்டும்.
3. நேற்று நடந்த சிறப்பான நிகழ்வுகளை கண்டுப்பலரும் வியந்தனர்.
4. கபிலப்பரணர் தமிழ்ப்புலவர்கள்.
5. கல்விக் கேள்விகளில் சிறந்து விளங்குபவர்கள் நன்மை தீமைகளை அறிவர்.
6. அந்த சாலை மிக செம்மையாக காணப்படுகிறது.
7. ஒவ்வொருவரும் படித்ததனை கவனமாக குறிப்பேட்டில் எழுதி வைத்தல் வேண்டும்.

8. புத்தக படிப்புத்தேவை. அதோடு பட்டறிவைச் சேர்த்து கொள்ளல் வேண்டும்.

9. பார்த்து பார்த்து கேட்டுகேட்டு மகிழ்ந்தேன்.

பொருத்துக.

௯ + ௪	–	௧ ௪
௮ + ௨	–	௧ ௯
௫ + ௯	–	௨ ௨
௨ ௦ + ௨	–	௧ ௩
௧ ௮ + ௧	–	௧ ௦

கட்டுரைப் பயிற்சி : நான் முதலமைச்சரானால்......

பண்பு

தீ நட்பை விலக்குதல்

நண்பகல் உணவு இடைவேளைக்குப் பிறகு காலந்தாழ்த்தி வகுப்பிற்கு வருவதனை வழக்கமாக்கிக் கொண்டிருந்தான் குலோத்துங்கன். அதற்காக, ஆசிரியரிடம் பலமுறை தண்டனையும் பெற்றான். ஆனாலும், தன் வழக்கத்தை மாற்றிக்கொள்ளவில்லை. இன்றும் அதே கதைதான். விரைந்து வகுப்பில் நுழைந்து, வழக்கமாக மாறன் அருகில் உட்காரும் குமரன் வராததால், அவ்விடத்தில் உட்கார்ந்தான். குலோத்துங்கனிடம் இருந்து வெண்சுருட்டின் வாடை வருவதனையறிந்து கொண்டான் மாறன். ஆசிரியர் வந்துவிட்டதனால், அவனிடம் அப்போது ஏதும் பேசவில்லை. மாலையில் வீட்டுக்குச் செல்லும்போது புகைபிடித்தல் தவறு எனவும், அதன் விளைவுகளையும் கூறி, அப்பழக்கத்தை விட்டுவிடுமாறு கூறினான். “எல்லாம் எனக்குத் தெரியும். உன்வேலையைப் பார்த்துக்கிட்டுப் போடா, பெரிய மேதை வந்துட்டான் அறிவுரை சொல்ல”, என அலட்சியமாகக் கூறிச் சினங்கொண்டான். இனி, அவனுடன் பழகுவதனை நிறுத்திக்கொள்ளுதல் வேண்டும் எனத் தன் மனத்திற்குள் முடிவெடுத்துக் கொண்டான் மாறன்.

1. மாறன் கூறிய அறிவுரை யாது? அதனைக் குலோத்துங்கன் ஏற்றானா?
2. மாறன் குலோத்துங்கனுடன் பழகக்கூடாது என முடிவெடுத்தது சரியா? தவறா?
3. குலோத்துங்கன் உங்கள் நண்பனாக இருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

வாழ்க்கைத்திறன்

மறுத்தல் திறன்

“ஏண்டா, இன்னிக்கிப் பள்ளிக்கூடம் சீக்கிரமா விட்டுட்டாங்க?” என்று செழியனிடம் கேட்டான் கதிர்வேலன்.

“நம் பள்ளியில் நாளை மருத்துவமுகாம் நடக்க இருக்கிறதாம். அதற்கு ஏதோ ஏற்பாடு செய்யணுமாம்; அதனால சீக்கிரமா விட்டுட்டாங்க. நாமெல்லாம் சேந்துபோயி கிணத்துல குளிச்சிட்டு அப்பறமா வீட்டுக்குப் போலாம், வாடா” என்று அழைத்தான் செழியன்.

கதிர்வேலனுக்கோ நீச்சல் தெரியாது. அதனால் குளிக்கச் செல்வதா? வேண்டாமா? பெற்றோருக்குத் தெரியாமல் இதுவரை எதையும் அவன் செய்ததில்லை. நண்பனின் அழைப்பை

மறுத்தால், நட்புக்கெடும். நண்பனுக்கு உடன்பட்டால் பெற்றோர் கடிந்துகொள்வர். நீச்சல் தெரியாமல் கிணற்றில் குளிக்கச் சென்று ஏதாவது நடந்துவிட்டால் என்னவாவது? நண்பனின் அழைப்பை மனம் நோகாமல் மறுப்பது எவ்வாறு என்று கதிர்வேலன் சிந்திக்கத் தொடங்கினான்.

கதிர்வேலன் நிலையில் நீங்களிருந்தால் உங்கள் நண்பரின் அழைப்பை மனம் நோகாமல் எவ்வாறு மறுப்பீர்கள்?

மதிப்புக்கல்வி

பொறுமை

துறவி ஒருவர் தெருவழியே நடந்து சென்றுகொண்டிருந்தார். அப்போது திடீரென்று நான்கு பேர் ஓடிவந்து அவரைத்தாக்கிவிட்டு ஓடிவிட்டனர். அருகிலிருந்த மற்றவர்கள் அவரிடம், அவர்கள் உங்களைத் தாக்கியபோது, நீங்கள் ஏன் தடுக்கவில்லை என்று கேட்டனர். அதற்கு அவர், நான் தடுக்காமல் இருந்ததற்குக் காரணம் உண்டு. ஒன்று, என்னை அடித்ததன் மூலமாக அவர்களின் சினம் தணிந்திருக்கும்; மற்றொன்று, என்னை அடிக்காவிட்டால் வேறுயாரையாவது அடித்திருப்பார்கள். எனவேதான், அவர்கள் சினம் தீரும்வரை என்னைத் தாக்கும்போது தடுக்காமல் இருந்தேன் என்றார், அத்துறவி. அவர்தாம் மகாவீரர்.

மொழியாக்கம் செய்க,

There is nothing in the world as valuable as time. The man who fails to utilize his time carefully will ever remain poor. The man who uses every minute of his time wisely will gain many advantages. Every night before going to bed, think over the day's happenings. If you have, make a resolve to be careful in future. Set apart some time everyday for prayer.

இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

1. Take away the fuel, the boiling will cease.
   எரிவதைப் பிடுங்கினால் கொதிப்பது அடங்கும்.
2. Practice makes perfect.
   சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்.
3. The law-maker should not be a law-breaker.
   வேலியே பயிரை மேய்ந்தாற்போல.
4. Misfortune never comes single.
   பட்டகாலிலே படும், கெட்ட குடியே கெடும்.
5. Look no gift horse in the mouth.
   தானம் கொடுத்த மாட்டைப் பல்லைப் பிடித்துப் பார்க்கலாமா?

நாட்டுப்புறப்பாடல்

தொழிற்பாடல் (மீனவர் பாடல்)

விடிவெள்ளி நம்விளக்கு – ஜலசா
விரிகடலே பள்ளிக்கூடம் – ஜலசா
அடிக்கும் அலையே நம்தோழன் – ஜலசா
அருமைமேகம் நமதுகுடை – ஜலசா
காயும் ரவிச்சுடர் கூரை– ஜலசா
கட்டுமரம் வாழும் வீடு – ஜலசா
பின்னல்வலை அரிச்சுவடி – ஜலசா
பிடிக்கும் மீன்கள் நம்பொருட்கள் – ஜலசா
மின்னல் இடிகாணும் கூத்து – ஜலசா
வெண்மணலே பஞ்சுமெத்தை – ஜலசா
முழுநிலாதான் கண்ணாடி – ஜலசா
மூச்சடக்கி நீந்தல் யோகம் – ஜலசா
தொழும் தலைவன் பெருவானம் – ஜலசா
தொண்டு தொழிலாளர் நாங்கள் – ஜலசா

பொருள் : மீனவர்களாகிய எங்களுக்கு விடிவெள்ளிதான் விளக்கு. பரந்த கடலே படிக்கும் பள்ளிக்கூடம். கடலலையே எங்களுக்கு உற்றதோழன். மீன்பிடி வலையே நாங்கள் படிக்கும் நூல். கட்டுமரமே வாழும் வீடு. காயும் கதிரே எங்கள் வீட்டுக் கூரை. தோன்றும் மேகமே நல்ல குடை. பிடிக்கும் மீன்களே எங்கள் பொருள்கள். இடியும் மின்னலும் பார்க்கும் கூத்து. வெண்மணலே படுத்துறங்கும் பஞ்சு மெத்தை. முழுநிலவே முகம் பார்க்கும் கண்ணாடி. மூச்சடக்கி நீந்துதலே எங்கள் வழிபாடு. நாங்கள் வணங்கும் தலைவன் பெருவானம். நாங்கள் அவனுக்குத் தொண்டு செய்யும் தொழிலாளர்கள்.

சொற்பொருள் : விரிகடல் – பரந்த கடல்; காயும் ரவிச்சுடர் – சுட்டெரிக்கும் சூரியக் கதிர்; யோகம் – வழிபாடு.

நாட்டுப்புறப் பாடல் – விளக்கம்

பழங்காலப் பண்பாட்டின் எச்சம் எனக் கருதப்படும் நாட்டுப்புறப் பாடல்கள் ஏட்டில் எழுதாக் கவிதைகள் ஆகும். இவை வழிவழியாகப் பாடப்பட்டுவரும் வாய்மொழி இலக்கியங்களே. பழமொழிகள், விடுகதைகள், கதைப்பாடல்கள், தொழிற்பாடல்கள் முதலியன நாட்டுப்புற இலக்கியத்துள் அடங்கும். தெம்மாங்குப் பாடல், களையெடுப்புப் பாடல், கதிரறுப்புப் பாடல், மீனவர் பாடல் முதலியன தொழிற்பாடல்கள்.

எளிய சொற்களும் நடைமுறை வாழ்க்கையை ஒட்டிய ஆழ்ந்த கருத்துகளும் அடங்கியவை இப்பாடல்கள். இப்பாடல்கள் வேலை செய்யும்போது களைப்பு ஏற்படாமல் இருக்கப் பாடப்படுவன. நாட்டுப்புறவியல் துறையில் பல்வேறு ஆய்வுகள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. நாட்டுப்புறப் பாடல்கள், படிக்காதவர்களும் ஓரளவு கல்வியறிவு பெற்றவர்களும் பாடுவனவாக உள்ளன. இப்பாடல்கள் செவிவழியாகப் பரவுவன. இவற்றை இயற்றியவர் இன்னாரெனக் கூறவியலாது.

மாதிரி வினாக்கள்

அ) புறவயவினாக்கள்

கோடிட்ட இடங்களை நிரப்புக.

1. மீனவர்களுக்கு இரவில் விளக்காக விளங்குவது ________________.
2. மீன்வலை மீனவரின் ________________.
3. மீனவர் கண்ணாடியாகப் பயன்படுத்துவது ________________.
4. மீனவரின் வாழும் வீடு ________________.

ஆ) குறுவினாக்கள்

1. மீனவரின் குடையாகவும் கூரையாகவும் விளங்குவன எவை ?
2. மீனவரின் பள்ளிக்கூடம், அரிச்சுவடி எவை ?
3. எவை மீனவருக்கு வீடாகவும் மெத்தையாகவும் உள்ளன ?
4. மீனவரின் தலைவர் யார் ?
5. மீனவர் எதனை யோகமாகக் கருதுகின்றனர் ?

இ) நெடுவினா

மீனவர் பாடல்வழி அவர்தம் வாழ்க்கையைப் பற்றி விவரிக்க.

ஒப்படைப்பு : நீவிர் அறிந்த பல்வேறு தொழிற்பாடல்களைத் தொகுக்க.